736

736.

பார்த்திவ ௵
மாசி—பங்குனி ௴

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

JL
Q22ന്ന21, N46
1446 5.3.
189219

March, 1946
Vol. 5, No. 3

٦٨٦

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	46
2.	ப்ரேம ஸேவா	50
3.	இன்னிசையால் இன்ப மூட்டிய நாயகி ...	55
4.	செய்திகள்	60
5.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	65

வியாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபனம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	பார்த்திவ ௵ மாசி—பங்குனி௴	ஸஞ்சிகை 3

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—o—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[ஐந்தாவது அங்கம்]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை 2, பக்கம் 29-ன் தொடர்ச்சி]

மஹாமோஹர்:— தேவீ ! துர்மதீ ! இப்படி நீ கேட்ட பரிப்ரச்நங்களுக்கு, எல்லோர்க்கும் விளங்கும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தைக்கொண்டே பதில் உரைத்தேன். நம் சத்ருவான விவேகனை ஜயிக்க இந்த ப்ரத்யக்ஷ தேவதைகளான பெண்களின் தயவே முக்ய ஸாதநம்.

['பரிப்ரச்நேந ஸேவயா' என்று கீதையிற் கூறியபடி, ப்ரஹ்ம ஜ்ஞாநம் பெறுவதற்காக ஆசார்யர்களிடம் பரிப்ரச்நங்களை ஶிஷ்யர் செய்வர். இந்த மஹாமோஹனுடைய நாஸ்திக மோஹ சாஸ்த்ர தத்வங்களைப் பற்றிக் கேட்ட கேள்விகள் 'பரிப்ரச்நங்கள்' என்று மஹாமோஹன் பேசுகிறான். வைதிக சாஸ்த்ரத்தில் தேவதைகள் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுபவ ரல்லர் ; அவர்கள் ப்ரஸாதமும் அத்ருஷ்டமேயொழிய த்ருஷ்டமல்ல வென்று அவர்களே சொல்லுகிறார்கள். மஹாமோஹ ஸித்தாந்தத்தில் தேவதைகளான பெண்மணிகளும் ப்ரத்யக்ஷம்; அவர்கள் ப்ரஸாதமும் த்ருஷ்டம். த்ருஷ்டத்தாலேயே ப்ரயோஜநம் ஸித்திக்க ஸம்பவ மிருக்கையில், அத்ருஷ்டத்தைக் கற்பிப்பது ஸரியல்ல வென்று வைதிகர்களே சொல்லுகிறார்கள்.]

துர்மதி:— பேசும் சைதந்யம் கூடிய தேவதைகளான பெண்களுடைய ப்ரஸாதம் (அநுக்ரஹம்) த்ருஷ்டமாயிருந்தா லென்ன ? அதைக்கொண்டு விவேகனை ஜயித்துவிட முடியுமா ?

மஹாமோஹர் :— ஜயம் கூடும் வழியைச் சொல்லுகிறேன் கேள்.

" க்ஷாம்யது தபஸி ரதாநாமவ்யுத்பந்நாநாம்
க்ஷாம்யது யமநியமாத்யைரங்கஹம் ஶிக்ஷிதாநாம் ।
ப்ரியமிஹ யதி ஸாரம் ப்ருஹ்ஹஸ்தாநவேக்ஷம்
பவது நவயமித்ரம் பாஸநாஸித்திருத்ய: ॥ "

'தபஸ்ஸ்வாத்யாயநிரதம்' என்றதுபோல் தவத்திலேயே இன்ப ரஸமுடையவரானால் என்ன ? ஆகமங்களென்னும் வேதங்களை அத்யயநம் செய்து அர்த்த விசாரம் செய்த கற்றறிந்தோரானால் என்ன ? நாள் தோறும் யமம் நியமம் முதலிய அஷ்டாங்கங்களோடு கூடிய யோகத்தை அப்யாஸம் செய்பவரானால் என்ன ? பெண்ணின் உருவம் முன்னொருகால் [illegible]துக் களித்தது மநஸ்ஸில்

01 008

ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மமான வாஸனை யென்னும் சுவரில் ஒட்டியிருப்பதே நினைவுக்கு வந்து, யோக ஸமாதியைக் கலைத்து நழுவச் செய்து, காம வேக க்ஷோபத்தை உண்டாக்கிவிடும். அந்தப் பெண் உருவத்தை மனத்தில் எழுதுவதற்கு ஒரு சித்ரம் எழுதும் சில்பியின் கை வேண்டுவதில்லை; மனமே தானே தனக்குள் எழுதிக்கொள்ளும். பெண்ணைப் பார்த்து எத்தனை காலமாயினும், அவ்வுருவம் ஒருக்காலும் அழிவதேயில்லை. மனத்திலிருக்கும் பழைய நினைவே எத்தனை காலமாயினும், யோகத்தில் உட்கார்ந்திருக்கையில் எதிரில் நிற்பதுபோல் மனத்தால் கல்பிக்கப்பட்டு, அந்த மானஸ ஸம்ஸ்கார சித்ரமே காமமோஹ வசமாக்கும். மேனகை முதலிய அப்ஸரஸ்ஸுக்களை தேவலோகத்திலிருந்து இந்த்ரன், அவர்கள் தபோநிஷ்டையைக் கலைப்பதற்காக அனுப்பவேண்டியதில்லை. மநஸ்ஸில் தோன்றும் பெண்ணுருவத்திற்கு ரூப பயமில்லை. மனத்திலுள்ள நினைவென்னும் ஸம்ஸ்காரமே அந்தச் சித்ரத்தை எழுதிக்கொள்ளும்; எழுதப்படும் சுவரும் ஸ்ம்ருதி யென்னும் நினைவே; அந்தச் சித்ரத்தை எழுத வேறு வெளிச்சுவர் வேண்டியதில்லை. 'சுவரை வைத்துக் கொண்டல்லவோ சித்ரம் எழுதவேணும்?' என்பர். இங்கே இவர் மநோபாவனையே எழுதும் சில்பியாகிறது; சுவரும் இதுவே. இப்படி உள்ளே எழுதப்படும் மானஸ உருவம் அழிவதேயில்லை என்றும் ரஸம். சித்ரம் எழுத வர்ணம் முதலிய ஸாமக்ரியும் தேவையில்லை.

யோக ஸமாதிக்காகச் செய்யும் ப்ரயத்நத்தில் மட்டுமல்ல இந்த அழகு. இவர்கள் சொல்லும் மோக்ஷ தசையிலும். இவர்கள் ஆதாரமாகக் கொள்ளும் சாந்தோக்யோபநிஷத்து என்ன கூறுகின்றது? தஹர வித்யையில் 'சரீரத்தை விட்டுக் கிளம்பிப் பரமாத்ம ஜ்யோதிஸ்ஸில் சேர்ந்த முக்தஜீவன் பெண் கூட்டத்தை விரும்பினுல், நினைத்த மாத்ரத்தால் வேண்டிய பெண்கள் கிளம்புவார்கள். அவர்களோடு கூடி அவனும் பெருமை பெறுவான்' என்று படித்துள்ளது. அதைச் சேர்ந்த பின்வாக்யமான ப்ரஜாபதி வாக்யத்தில், 'சரீரத்தை விட்டுக் கிளம்பிப் பர ஜ்யோதிஸ்ஸோடு கலந்தவன், அங்கே ஸ்த்ரீகளோடும் வாஹநங்களோடும் யதேஷ்டம் போஜந பாந விஹாரங்களைச் செய்துகொண்டு ரமிக்கிருன்' என்று படிக்கப்பட்டது. ஸ்த்ரீகளோடு ரமிப்பது முக்தியென்று அவர்களே பேசுகிருர்கள். அந்த வாக்யத்தில் சரீரமில்லாமை போகமென்று பேசினது முன்னுக்குப் பின் விரோதம். சரீரமே ஆத்மா வென்று அஸுரர்களுக்கு முதல் முதலில் ப்ரஜாபதி உபதேசித்ததுதான் உண்மை. இந்த்ரனுக்கு அவர் உரைத்த மோக்ஷஸுகம், சரீரஸுகம், ஸ்த்ரீ முதலியவை போகங்களே. தாரேஷணு த்யாகம் என்று வேதாந்தங்கள் பேசுவதே அவற்றின் உண்மைக் கருத்தல்ல. மோக்ஷத்தில் இந்தக் காம போகங்கள் அழிவில்லாத ஸத்ய மென்றும் கூறப்படுகிறது. இது, தேளுக்குப் பயந்து ஓடிப் பாம்பின் வாயில் போய் விழுவதற்கு ஒப்பாகும்.

மந்மத ஸேனைப் படைகளான யுவதி மணிகள் எதிர் நிற்கும்போது, யார்தான் தீரரா யிருப்பார்? அவர்கள் மேனியில் இருட்டு கூந்தல் ரூபமாயும்,

சந்த்ரன் முக ரூபமாயும், பூங்கொத்துக்கள் ஸ்தந ரூபமாயும், ஆகாயம் இடுப்பு ரூபமாயும், நீர்ச்சுழல் நாபி ரூபமாயும், இப்படி உலகத்தில் சேராததெல்லாம் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படியே, வாழை துடையாயும், கண்ணாடி முழந்தாளாயும், மன்மதன் அம்பறாத்தூணி கணுக்காலாயும், தாமரைப் பூக்கள் கண் உள்ளங்கை உள்ளங்கால்களாகவும் அமைந்துள்ளன. இப்படி, சேராத பல அழகுக ளெல்லாம் ஒருமிக்கச் சேர்ந்து மனத்தையும் கண்ணையும் பறிக்கும் பெண்ரத்நம், அன்ன நடையோடு எதிரே அசைந்தசைந்து வருவதைக் காண்கையில், ஒவ்வோர் அவயவத்திற்கும் உண்மையான அழகுப் பொருளெல்லாம் எங்கெங்கோ தனித்தனியாய் இருப்பது இப்பெண்வடிவில் ஒருமிக்க அழகுக் காட்சியா யிருப்பதை நினைத்து நினைத்துப் பார்த்துப் பார்த்து மோஹிப்பரோ? மனம் கலங்காத தீரரா யிருப்பரோ ? யோசித்துப் பார்.

நம் எதிரிகளான வேதாந்திகள், அநாதி காலமாய் ஸித்தராய் வைகுண்டத்தில் நித்யவாஸம் செய்யும் நித்ய ஸூரிகள். ஒருவருக்கு எத்தனை ஸ்த்ரீகள்! இவர்கள் காம மற்றவராம்; நாம ரூபங்களுக்கு வசப்படாதவராம். நித்யரும் முக்தரும் கிடக்கட்டும். அயர்வறு மமரர்கள் அதிபதி என்று இவர்கள் சொல்லும் ஸர்வேச்வரன், லக்ஷ்மீ பூமி நீளை யென்னும் தேவிமாருக்கு நாயகனும். இன்னம் அவனுக்கு ஆயிரக்கணக்கான தேவிகளும் உண்டு என்கிறார்கள். காமமென்று நாம் கொண்டாடும் புருஷார்த்தத்தை அடியோடு தள்ளவேண்டுமென்று எதிர்க்கக்ஷி பேசும் விவேகவான்களான வேதாந்திகள், சத்ருவின் பட்டணத்தைக் கொளுத்தப் பார்க்கும் நெருப்பைக்கொண்டு, தங்கள் மனோரதமான முக்தி நகரத்தையும் எரித்து விடுகிறார்க ளென்பது திண்ணம். இவர்கள் மோக்ஷம் காமமயம்; ஸ்த்ரீமயம். இவர்களுடைய நித்யரும் முக்தரும் காமமயர்; ஸத்ரீமயர்; இவர்கள் பெருமாளும் ஸத்ரீமயர்.

இப்படி ஸ்த்ரீமயராயும் விடராயும் இவர்கள் பெருமாள் இருப்பதில் ஒளி மறைவு உண்டோ? ‘ தமஸோ த்வாரம் யோஷிதாம் ஸங்கிஸங்கம் ’. ஸ்த்ரீகளுடைய ஸங்கத்திலேயே ஈடுபட்டு அதைப்பற்றியே பேசித் துதிசெய்யும் புஜங்க ரென்னும் விடர்களுடைய சேர்க்கை, தமஸ்ஸென்னும் அஜ்ஞாநத்துக்குள் நுழையும் வாசல். அந்தத் தமஸ்ஸில் அகப்பட்டுக்கொண்டால் மீள வழியில்லை.

“ ஸத்த்வ ப்ரவர்தகஸ்ஸந் ஸஹஸ்ரயாமி: ஸநாதநஸநாதநேஷோஸி ।
பஹுஸ்த்ரீவல்லபஜந ஸங்கீ விஹரதி விவிதாஸு ராஜதாநீஷு ॥ ”

‘ ஸத்த்வஸ்யைஷ: ப்ரவர்தக: ’ [இந்த மஹாபுருஷன் ஸத்வத்தை ப்ரவர்த்தநம் செய்பவன்] என்பது அவர்கள் உபநிஷத்து. அவன் எல்லோருக்கும் ச்ரேஷ்டன் என்றும், உலகத்திற்கே ஞான மார்க்கத்தை அநுஷ்டித்துக் காட்டவேண்டியவனென்றும் சொல்லும் ஈச்வரன். எண்ணற்ற வயது முதிர்ந்த கிழவனாயினும் தன்னுடைய ப்ரிய தேவிமாரோடு ராஜதானிகளான பட்டணங்களில் பஹுமுகமான புஜங்கத்தோடு ஸங்கமுடையவ னாகவே எல்லோரும் பார்க்கக் காட்சி

தருகிறுன். அப்படியிருந்துகொண்டு நாயகிமாரோடு கூடி. அநேக ஜனங்கள் கூட்டத்தில் உத்ஸவங்கள் செய்துகொண்டு விஹாரம் செய்கிறுன். [புஜங்கம் என்று பாம்பிற்கும் ஸ்த்ரீ விடனுக்கும் பெயர். 'பஹுமுக' என்பதற்கு 'அநேக தலைகளையுடைய' என்றும், 'பல விதங்களாலும்' என்றும் பொருள். இங்கே, 'பஹுமுக ஸங்கீ' என்னும் பதத்தில் ச்லேஷையால் இரண்டு பொருள்கள். ஒரு நாக்குடையவர் ஸத்யவாதியென்றும், பல நாக்குகளால் பேசுகிறவர்கள் பொய்யரென்றும் சொல்லப்படுவர். பாம்புகளுக்கு 'த்விஜிஹ்வா' (இரண்டு நாக்குள்ளவை) என்று பெயர். 'நாக்கு ஒன்ரு இரண்டா!' என்று கேட்பது உண்டு. லக்ஷக் கணக்கான ஜனங்கள் வஸிக்கும் ராஜதாநியான பட்டணங்களில் இப்படி எல்லோருக்கும் காட்சி. இந்த ஈச்வரன்தான் ஆதி குருவாம்; ஆதி ஆசார்யனும்; இவர் ஆசாரம் இப்படி].

இந்த வேதாந்திகள் நமக்கு வேண்டியவரான சார்வாக பக்ஷத்தை மறுத்துப் பேசுவதும், பிரியாத ஈச்வர தம்பதிகளை ஸமர்த்திப்பதும், 'நூறு கொடுக்க மாட்டேன்; ஐந்து இருபது மட்டும்தான் கொடுப்பேன்' என்று பேசும் மஹா ப்ராஜ்ஞனுடைய வார்த்தையை ஒக்கும். இரண்டு மதங்களும் ஒரே ஸ்த்ரீப்ரேமை மயமாகவே முடிகின்றன. ஆதலின் ஒருவரை யொருவர் தூஷிக்க இடமேது?

வெகு காலம் ப்ரஹ்மசர்ய வ்ரதத்தைக் குருகுலத்தில் அநுஷ்டித்து ப்ரஹ்ம வித்யையை இவர்கள் கற்று என்ன முடிவு பெறுகிருர்கள்? மோக்ஷத்தில் யதேஷ்டம் யதா ஸங்கல்பம் கணக்கற்ற பெண்களோடு விஹரிப்பதே. அந்தப் பலத்தின் உண்மையை யார் கண்டார்? இங்கேயே பெண்டிரோடு ஸௌக்யமாய் அநுபவிக்கட்டுமே. சிரகால ப்ரஹ்மசர்ய மென்னும் ஸாதநத்தால் முக்தியில் ஸ்த்ரீகளோடு விஹாரம் ஸித்திக்குமா? ஸாதநத்திற்கு ஸாத்யம் நேர் விருத்தம். எத்தனை காலம் குருகுலத்தில் ப்ரஹ்மசர்யம் இருப்பது? ப்ரஜாபதியினிடம் நம் விரோசநரும் இந்த்ரனும் சென்ருர்கள். இந்த்ரன் 101-வர்ஷம் ப்ரஹ்மசர்ய மிருந்துவிட்டு முடிவில் என்ன உபதேசம் பெற்ருன்? ப்ரஜாபதி வாக்ய மென்னும் உபநிஷத்தையே பார்ப்போம். ["ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடன் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யாநைர்வா"] 'முக்தன் அங்கே வேண்டியபடி ம்ருஷ்டாந்நத்தைப் புஜித்துக்கொண்டும், ஸ்த்ரீகளோடும், ரத கஜ துரக முதலிய வாஹநங்களோடும் வேண்டியபடி ரமித்துத் திரிகிருன்' என்பது ப்ரஜாபதி 101-வர்ஷங்கள் மஹா ஆயாஸத்துடன் ப்ரஹமசர்ய மிருந்த இந்த்ரனுக்கு உபதேசித்தது.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரஹாணே நம:

ப்ரேம ஸேவா

[ஸ்ரீ உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர், வித்வான், M. A., L. T., திருவையாறு.]

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை 2, பக்கம் 40-ன் தொடர்ச்சி]

ஒரு பெரியாரை ஆண்டாள் திருவிழாவின் கருத்தைச் சொல்லும்படி வேண்டிக்கொண்டாள். வெகு அன்புடன் அந்தப் பெரியவர் ஸ்ரீ ஆண்டாளுடைய கதையை எடுத்துரைத்தார். பரிதாபமும் நம்பிக்கையும் முயற்சியும் வெற்றித் திருவும் நிறைந்த அப்பெண்ணரசியின் கதையைக் கேட்குங்கால், சில இடங்களில் வியப்பையும் சில இடங்களில் களிப்பையும் சில இடங்களில் எல்லையற்ற உத்ஸாஹத்தையும் அடைந்தாள். இப்படிப் பெண்ணாகப் பிறந்த ஒருத்தி, தன் உடல் பொருள் ஆவியெல்லாம் தன்னைப் படைத்த இறைவன் ஒருவனுக்கே உரியவை என்று தன் வாழ்க்கை மூலமாக நடத்திக்காட்டிய மாபெருந் தைர்யத்தை வியந்தாள். பெண்ணான அவள் நோன்பிருந்து, வாடி மெலிந்து, ஒரு ஆயுள்காலம் முழுவதும் ஸர்வலோக நாதனுக்காகக் காத்திருந்து வெற்றிபெற்று, உலக மணவாளனான ஸ்ரீ கண்ணபிரானது நித்யமான வதுவாய் (நாயகியாய்) விளங்கியதை உன்னிப் பெருமிதம் கொண்டாள். "ஆஹா! இவளன்றோ பெண்! பெண் சங்கங்களில் பேசும் பெண்களா பெண்கள்? இறைவனையும் இரங்கச் செய்து தன்வசப்படுத்தி, உலகத்தின் நித்யமான க்ஷேமத்தை மன்றாடி வேண்டிக்கொள்ளும் மாசற்ற இந்தப் பெருமாட்டியின் அருளுக்கு எது உவமையாகமாட்டும்?" இவ்வாறு நினைக்க இந்துலேகையின் கண்களில் நீர் தளும்பிற்று. அன்பும் அருளும் கிறிஸ்தவ மதத்தில்தான் உண்டென்றும், அதில்தான் மாதரார்க்கு உன்னத ஸ்தானம் உண்டென்றும், இதுகாறும் நம்பியிருந்தாள். ஒரே தெய்வத்தை நம்பி, அவன் அருளால் அவனது நித்ய பதத்தை அடைய மனிதனுக்கு உரிமை உண்டென்பதை விளக்கமாக உரைக்கும் ஸ்ரீ வைஷ்ணவத்தின் கொள்கைகள், ஓர் இனிய கான விசேஷம்போல் அவள் காதுகளில் த்வனித்தன. ஸ்ரீ ஆண்டாளின் வாழ்க்கையானது, அதற்குத் தனித் தூய்மையும் நம்பிக்கையும் வெற்றியும் புத்துயிரும் அளித்த தெனக் கண்டாள். இவ்வாண்டாளென்ற பெண்மணியால், இந்நாடும் பெண் தன்மையுமே உயர்ந்தன எனக் கண்டாள். தழுதழுத்த குரலில் "ஸ்வாமி! இப்பூமண்டலத்தில் பதினான்கு வருடம் வாழ்ந்த அப்பெண்மணி மணமே செய்துகொள்ளவில்லையா?" என்றாள்.

பெரியவர்:—"அம்மா! எப்படி முடியும்? மாலா கைங்கர்யம் செய்துவந்த ஒரு பெரியாரின் புதல்வியான அவ்விளங்கொடி, தானே தாமோதரனுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஓர் மாலையென்றே தன்னைப் பாவித்துக்கொண்டாள். மண்ணிலே பிறந்து மண்ணிலே மடியும் மனிதனை மணக்க அம்மாசற்ற பெருமாட்டி இசைவளா? தன்னை எம்பெருமானுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு திவ்ய ஹவிஸ்ஸாகவும், அதை அவனன்றி வேறு யாரும் ஏற்கவும் முடியாது ஏற்கவும் கூடாதென்னும் கருத்தை

"வானிடை வாழுமவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தவவி
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடை யாழிசங் குத்தமர்க்கென்று
உன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிட வர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே."

என்பதனுல் தெரிவிக்கிருள். இப்பெருமாட்டியினிடம் அன்பின் மணம் கமழும். தூய்மை மணம் திகழும். அருளின் மணம் அடிக்கும். இவளது மாலையை இறைவன் ஏற்றுக்கொண்டது என்ன ஆச்சர்யம்?" என்ருர்.

பெண் ஜன்மத்தின் பெரும் பயனுக ஆண்டாள் கொண்ட நோக்கங்களைக் கேட்டாள் இந்துலேகா. திடுக்கிட்டாள்.

"எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முந்தன்னோ
டுற்ருேமே யாவோம் உனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்."

'எவ்வளவு எளிய தமிழ்! எவ்வளவு உயர்ந்த கருத்துக்கள்! இந்த மாதர் திலகத்தைச் சிரோபூஷணமாகக் கொண்ட உயர்ந்த வைஷ்ணவ மதத்தில் நான் பிறந்தும், இவற்றை யெல்லாம் அநுபவியாத பாவியானேனே!' என்ற ஒரு கருத்து மெதுவாக அவள் மனத்தில் எழ ஆரம்பித்தது.

இவ்விதம் எண்ணமிட்டுக்கொண்டு அவள் வீற்றிருக்குங்கால், தடார் தடார் என்று அஷ்டாதச வாத்யங்களின் ஒலி அவளை எழுப்பியது. உடையைச் சரிப்படுத்திக்கொண்டு, அப்பெரியவருடன் சென்று ஸ்ரீஆண்டாளை நோக்கினுள். வயிர வைடூர்ய மரகத ஆபரணங்களும் பட்டாடைகளு மணிந்த ஆண்டாள் உலகாளும் அரசியாகத் தோன்றினுள். ஆனுல் பீதாம்பரங்களுக்குள்ளே ஜ்வலிக்கும் நவரத்நங்களுக்கு இடையில், ஆண்டாளின் தவக்கோலத்தையே இந்துலேகா கண்டாள். தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யத் தெய்வத் திருப்பாவை நோன்புகொண்டு, நெய்யுண்ணுது, பாலுண்ணுது, மையிட் டெழுதாது, மலரிட்டு முடியாது, கொண்ட தவக்கோலத்தையே பார்த்தாள். 'இப் பெருமாட்டியின் அருள்மயமான இதயத்தில் என்ன நம்பிக்கை! என்ன த்ருட விச்வாஸம்! என்ன ஔதார்யம்!' என்று சொல்லிக்கொண்டே மெதுவான நடையுடன் தன் இருப்பிடம் சென்ருள். உடையை அவிழ்த்து வேறு உடை உடுக்காது அப்படியே படுக்கையில் வீழ்ந்தாள். "அம்மா! கோதாய்! உலகத்தின் துயருக்கு ஓர் அருமருந்தாய் நீ செய்த செயல்தான் என்னே! குற்றேவல் செய்யாத ஜன்மமும் ஜன்மமா? என் உடலை இப்பெருமாட்டிக்கு என் அர்ப்பணம் செய்யக்கூடாது? வைஷ்ணவத் தொண்டு என்ருல், மக்களின் மனத்

தைத் தூய்மையாக்கி மாதவன்பாற் படுத்துவதுதானே. எனக்கு ஏற்பட்டிருக்கும் படிப்பு, மேனாட்டு நாகரிகம், இவைகள் ஏன் அத்தொண்டிற்குப் பாதக மாகவேண்டும்! இவை யெல்லாம் அதற்குத் துணை யல்லவா?'' என்று புலம்பினள். ஸ்ரீவில்லிபுத்தூரில் நாலு நாள் இருந்தாள். அவள் கண்களில் மோகம் குடிகொண்டது. அந்த மோகம் அவள் வடிவழகை அதிகப்படுத்தியது. "இந்த உலகத்தையன்றோ ப்ருந்தாவனமும் ஸ்ரீவைகுந்தமு மாக்கி மாதவனது ஒரு கோயிலாகச் செய்யவேண்டும்! அந்தப் பெரியவர் சொல்லியபடி ஆண்டாள், 'கொம்மை முலைகள் இடர்தீரக் கோவிந் தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே யினிப்போய்ச் செய்யும் தவந்தா னென்?' என்றல்லவோ வருந்துகிறாள்?'' என நினைந்துருகி, விரிவான உரைகளுடன் கூடிய 'திருப்பாவை' 'நாச்சியார் திருமொழி' எனும் இவ்விரு நூல்களையும் தன்னுடன் சென்னைக்குக் கொண்டுசென்றாள்.

பல வர்ஷங்கள் சென்றன. சென்னையில் 'ப்ரேம ஸேவாலயம்' என்ற வித்யாலயத்தைப் பற்றிக் கேள்வியுறாதவர்கள் இல்லை. அது மிகவும் விஸ்தாரமான மைதான வெளியில் அழகிய கட்டிடங்களுடன் கூடியது. பள்ளிக்கூடமும் ஆஸ்பத்ரியும் பஜனாலயமும் பார்க்கப் பார்க்க இனிமை பயக்கும். ப்ரேமஸேவாலயத்தைப் பார்க்க மைத்ரா என்ற மாணவியும் அவளது நண்பர்களும் சென்றார்கள். மைதானத்தில் நூற்றுக் கணக்கான குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஸுமார் ஐம்பது ஐம்பத்தைந்து வயதுள்ள காஷாயச் சேலை உடுத்திய ஒரு மாது, முன்னே வாயிற்படி யருகில் நின்றுகொண்டிருந்தார். அவர் இவர்களைப் பார்த்து 'யார்?' என்றார்.

மைத்ரா:—'நாங்கள் காலேஜ் மாணவர்கள்; ப்ரேமாலயத்தைப் பார்க்க வந்தோம். இதைப்பற்றி மிகவும் கேள்வியுற்றிருக்கிறோம்' என, அந்த அம்மாள் அன்புடன் 'வாருங்கள் வாருங்கள்' என்று அவர்களைச் சுற்றி அழைத்துக் காட்டப் புறப்பட்டார்.

மைத்ரா:—'இந்தப் பெண்கள் பழைய முறையைப் பின்பற்றாமல், பாட்மிண்டன் டென்னிஸ் எல்லாம் இங்க்லீஷ் பள்ளிக்கூடங்களிற் போலவே ஆடுகிறார்களே!' என்றாள்.

அந்த அம்மாள் சிரித்துக்கொண்டு, "அதனால் சாஸ்த்ர நிஷேதம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே! பெண்களின் உடல் வலிமைக்காக இவைகள் குற்றமற்ற விளையாட்டுக்க ளல்லவா? படிப்பு முறையே புதுமுறைதான். குழந்தைகள் ஆங்கிலந்தான் படிக்கின்றனர். கவர்ன்மெண்ட் யுனிவர்ஸிடி பரிக்ஷைகளுக்குத்தான் போகின்றனர். ஆனால், நம் ஸம்ப்ரதாயம் அநுஷ்டாநம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் இவற்றின் அஸ்திவாரத்தைக்கொண்டு போடப்பட்டது இக்கல்வி. நம் மதத்தின் அறிவு நிரம்பும் கல்வியுடன், லௌகிகக் கல்வி பயில்வதில் குற்றமென்ன? எப்படியிருந்தாலும் கிறிஸ்தவரின் கலாசாலைக

ளிற் பயில்வதைவிட இது எத்துணை மேலானது? மதுராந்தகத்தில் ஏற்படுத்தப் பட்ட கல்லூரி ஒரு மாபெரும் நிதர்சன மல்லவா? முற்றுந் துறந்த ஒரு முனிவர் இதை நிறுவி, இத்துடன் ஆத்மார்த்மான கார்யங்களையும் செய்துவருகிறா ரல்லவா? மேனாட்டுப் பாதிரிமார்கள் இம் முறையைப் பின் பற்றினார்கள். கலாசாலைகளில் ஸமயக்கல்வி இல்லாமல்போனது எவ்வளவு பரிதபிக்கத் தக்கது! இருக்கும் கலா சாலைகளில் நம் ஸித்தாந்தக் கல்வி புகட்ட முடியாவிட்டால், அதை அடிப்படை யாகக் கொண்ட புதுமாதிரிக் கலாசாலைகளை நாம் ஆரம்பிக்க வேண்டும்.'

[இப்படிச் சொல்லிக்கொண்டே சற்று தூரம் செல்ல]

ஒரு லதா மண்டபம் காணப்பட்டது. அழகிய கொடிகளில் கொத்துக் கொத்தாய் மலர்கள் காணப்பெற்று, ஒன்றோடொன்று பிணைந்து இனிய நிழலைச் செய்தன. உள்ளே ஓர் அழகிய முனிவரது ப்ரதிமை வைக்கப்பட்டிருந்தது. உட்புறம் முழுவதும் மிகவும் ப்ரகாசமான ஓர் எலெக்ட்ரிக் பல்பின் நீல ஒளி பரவியது. அந்த அம்மாள், 'குழந்தைகளே! இது ஸ்ரீ சடகோபனின் ஞாப கார்த்தமாக ஏற்படுத்தப் பட்டது. இப்படி இக்கட்டிடம் முழுவதும் ஆங்காங்கு ஆழ்வார்களின் உருவங்கள் வைக்கப்பட்டு, அழகான முறையில் அவை அலங் கரிக்கப்பட்டிருக்கின்றன. உண்ணும்பொழுதும் விளையாடும்பொழுதும் ஐம் புலன்களும் நம் தர்சனத்தின் மஹான்களை விஷயீகரிக்கவேண்டும். அப்பொழுது தான் நமக்கு அவர்கள்மீது அன்புண்டாகும்; ஆர்வமுண்டாகும்' என்றார்.

சற்று தூரம் நடந்தார்கள். பாறைகள்போல் அடுக்கப்பட்ட திவ்ய பீடத்தின்மேல் ஓர் இளம்பெண் கைகுவித்து நிற்பதுபோல் ஒரு ப்ரதிமை வைக்கப்பட்டிருந்தது. மாலைக் காலச் சூரியனது பொன்மயமான கிரணங்கள் அப்ரதிமையின் மலரடியைத் தீண்டிக்கொண்டிருந்தன. திருவடிகளின் கீழ் கில்ட் அக்ஷரங்களில் "எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முந்தன்னோ டுற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று எழுதியிருந்தது. அந்த அம்மாள் கைகுவித்து அப்பால் சென்றாள். சிறிது தூரம் சென்றதும், 'ஸ்ரீ ஆண்டாள் வைத்யசாலை' என்று ஓரிடத்தில் எழுதியிருந்தது.

மைத்ரா:—'அம்மா! இங்கு ஆயுர்வேத முறையையா பின்பற்றுகிறார்கள்?' என, அந்த அம்மாள் சிரித்துக்கொண்டு, 'இல்லை இல்லை; காலத்தின் ப்ரசண்ட வேகத்தை நாம் எதிர்க்கமுடியாது. இந்தப் புதிய யுகமானது வைத்யத்தில் சிறந்த முன்னணியில் நிற்கிறது. அதோ காஷாய உடை தரித்திருக்கும் பெண்களுக்குச் 'செல்வச்சிறுமிகள்' என்று பெயர். அவர்கள் ஆங்கில வைத்யக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்கள்' என்றாள். பிறகு ஒரு பெருமூச்சு விட் டாள். 'ஐயோ! அநாதையான நம் விதவைகளின் வாழ்நாட்களை, மஹா புநிதவதியான ஸ்ரீ ஆண்டாளைப் பின்பற்றி லோகஸேவை செய்யச்செய்து ஏன் புநிதமாக்கக் கூடாது!' என்று ஒரு யோசனை வந்தது. "நம் ஆண்டாள் துணை நின்றாள்; வாழ்வில் ஒரு நம்பிக்கையு மில்லாமல், எல்லாரும் இகழ்கின்ற இந்த விதவைகள், வாஸ்தவத்தில் ஸ்ரீகண்ணனது காதலிக ளல்லவா? இவர்கள் வழி

தவறி மானிடவர்க்குப் பேச்சுப் பட்டதாலல்லவா இவர்களுக்கு இந்தத் துக்கம் வந்தது ? அவர்களுடைய வாழ்வை ஆண்டாள் காட்டிய மார்க்கத்திற்கு அர்ப்பணம் செய்து, இறைவனுடைய கைங்கர்ய ரூபமாய், கல்வி ரோகநிவாரணம் ஸ்துதி முதலிய துறைகளில் உழைத்துப் புனிதப்படுத்துவது, ஸ்ரீ ஆண்டாளுக்கும் அவளுடைய மணாளனை லோகநாயகனுக்கும் திருவுள்ள உகப்பை உண்டாக்குமல்லவா? இந்த ஏழைக் கைம்பெண்கள் காலையிலும் மாலையிலும் வைத்யசாலையில் நோயாளிகளுடன் இருப்பார்கள். சிலர் இரவிலும் கண்மூடாது நோயாளிகளுக்கு மணிப்படி மருந்து கொடுத்தல் ஆஹாரமளித்தல் முதலிய தொண்டுகளைச் செய்வார்கள். சிலர் உபாத்தியாயினிகளாகவும் வித்யார்த்திகளின் விடுதியில் அவர்களைக் கண்காணிப்பவர்களாகவும் இருக்கின்றனர். காலையிலும் மாலையிலும் நாங்கள் ஸுமார் முன்னூறு பேர்கள் திருப்பாவைப் பாசுரங்களை, அவற்றைப் பாடிய திருப்பாவையின் (ஆண்டாளின்) முன்னர், இனிய ச்ருதியுடன் எங்களுடைய பூஜா பவநத்தில் இசையாகப் பாடிவருகிறோம்'' என்றாள்.

கொஞ்ச தூரத்தில் ஓர் அழகிய மண்டபம் காணப்பட்டது. உள்ளே காஷாய உடை அணிந்த பத்துப் பன்னிரண்டு பெண்கள் பலவித மலர்மாலைகளைத் தொடுத்துக்கொண் டிருந்தனர். அவர்கள் எதிரில், பெரியாழ்வார் யானை மீது ஊர்ந்து வருவது போலவும், நீல வானில் ஸர்வேச்வரன் பெரிய திருவடி மேல் ஏறி வந்து நின்று அவருக்கு அருள் செய்வதுபோலவும், ஸ்வதை வேலை செய்யப்பட்டுத் தத்ரூபமாய்க் காணுமாறு அழகிய வர்ணம் தீட்டப்பெற்றிருந்த சித்ரம் ஒன்று காணப்பட்டது. ஒரு நீல எலெக்ட்ரிக் பல்பின் வெளிச்சம் அத் தோற்றத்திற்கு ஒரு புத்தொளியைக் கொடுத்தது.

அந்த அம்மாள் மேலும்: 'இவர்கள் மாலை கட்டுபவர்கள்; வைத்ய சாலை முறையில்லாத நாட்களில் இத் தொண்டு நடைபெறும்.' என்றாள்.

மைத்ரா:— 'இந்த மாலைகளை என்ன செய்வீர்கள் ?'

அம்மாள்:— இரண்டு பெண்கள் தினந்தோறும் நாலைந்து கோவில்களுக்குத் தாங்களே நேரில் சென்று இவைகளைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து வருவார்கள். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்த ஸஹாயப் பெருமானுக்கு முதலில் மாலைகள் அனுப்பப்படும். அதிகமாய் இருக்கும் மாலைகள் கட்டிடங்களில் உள்ள திருவுருவங்களுக்குச் சாத்தப்படும்.

மைத்ரா:— 'தங்கள் பெயர் என்ன அம்மா ?'

அம்மாள் சிரித்துக்கொண்டு, 'என்னை இந்துலேகா' என்பார்கள். 'குழந்தைகளே! நாளைக்கு வாருங்கள். பூஜா ஸதநத்தையும் காட்டி, எங்கள் ஸேவா க்ரமத்தையும் சொல்லுகிறேன்' என்றாள்.

[தொடரும்]

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

இன்னிசையால் இன்ப மூட்டிய நாயகி

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள், பஸவங்குடி, பெங்களூர்.]

“என்ன ஆநந்தம்! என்ன ஆச்சரியம்! என் பாக்யம்தான் என்ன! ஸ்ரீ கோதை என் செல்வத் திருமகள். நான் எவ்வளவு தந்யன்! இவளுக்கு வயதோ மிகவும் ஸ்வல்பம். அப்பொழுது மலர்ந்து விளங்கும் மலர் போன்ற நவ யௌவநம். பொங்கிப் பெருகும் ஸௌந்தர்யக் கடல். கோது கொட்டை யற்ற பக்திக் கனி. அள்ளக் குறையாத ஞானநிதி. இப்பெண்மணி யார்? மலர் மகளோ? நிலமகளோ? நப்பின்னை கொலோ? ஒன்றும் விளங்கவில்லையே! இவளுடைய பாடல்களில்தான் என்ன பக்தி ரஸம்! ராகமும் தாளமும் பாவத்தை விளக்கும் அழகுதான் என்னே! உண்மையில் தேவகாநத்தை மீறுகிறது. இவள் எவளாகில் என்ன? இத்தெய்வப் பெண்ணுக்குத் தக்க கணவனை எங்குப்போய்த் தேடுவேன்? எம்பெருமான் அத்யந்தம் உகக்கும் திருத்துழாய்ப் பாத்தியில் அல்லவோ இக்கந்யா ரத்நம் கிடைத்தாள்? இவள் அத்திருமாலுக்கே உரிய நாயகி. ஆனால் அவ்வச்சுதனை எங்குத் தேடி ஸமர்ப் பிப்பேன்! இக்கலியில் அவன் விபவாவதாரம் எடுக்கும் காலமும் நெருங்க வில்லையே! அர்ச்சாமூர்த்தி இவளை எவ்விதம் பாணிக்ரஹணம் செய்து கொள்வார்?”

“முன்பு மிதிலைச் செல்வி அநஸூயா தேவிக்குத் தன் திவ்ய திருமணக் கதையை,

‘‘𑌪𑌤𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌸𑍁𑌲𑌭𑌂 𑌵𑌯𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌮𑍇 𑌪𑌿𑌤𑌾 ।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌮𑌭𑍍𑌯𑌗𑌮𑌦𑍍𑌦𑍀𑌨𑍋 𑌵𑌿𑌤𑍍𑌤𑌨𑌾𑌶𑌾𑌦𑌿𑌵𑌾𑌧𑌨𑌃 ॥
𑌸𑌦𑍃𑌶𑌾𑌚𑍍𑌚𑌾𑌪𑌕𑍃𑌷𑍍𑌟𑌾𑌚𑍍𑌚 𑌲𑍋𑌕𑍇 𑌕𑌨𑍍𑌯𑌾𑌪𑌿𑌤𑌾 𑌜𑌨𑌾𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌧𑌰𑍍𑌷𑌣𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌶𑌕𑍍𑌰𑍇𑌣𑌾𑌪𑌿 𑌸𑌮𑍋 𑌭𑍁𑌵𑌿 ॥
𑌤𑌾𑌂 𑌧𑌰𑍍𑌷𑌣𑌾𑌮𑌦𑍂𑌰𑌸𑍍𑌥𑌾𑌂 𑌸𑌂𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌃 ।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌣𑌵𑌗𑌤𑌃 𑌪𑌾𑌰𑌂 𑌨𑌾𑌸𑌸𑌾𑌦𑌾𑌪𑍍𑌲𑌵𑍋 𑌯𑌥𑌾 ॥
𑌅𑌯𑍋𑌨𑌿𑌜𑌾𑌂 𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌨𑌾𑌧𑍍𑌯𑌗𑌚𑍍𑌛𑌦𑍍𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍 ।
𑌸𑌦𑍃𑌶𑌂 𑌚𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌮𑌹𑍀𑌪𑌾𑌲𑌃 𑌪𑌤𑌿𑌂 𑌮𑌮 ॥ ”

[எனக்குக் கல்யாண காலம் ஸமீபித்தது. பார்த்தார் என் தந்தை. ரூபத்திலும் குணத்திலும் குலத்திலும் பலத்திலும் இவளுக்கேற்ற பர்த்தா வாய்க்கவேணுமே! எங்குப் போய்த் தேடுவேன்? பரம தரித்ரனுக்கு நிதி

கிடைத்தாற்போல், எனக்குக் கிட்டாத இக்கந்யாரத்நம் கிடைத்திருக்கிறுள். இவளைத் தக்க கணவனிடம் ஒப்படைக்காவிடில், பெண்ணை இழந்ததற்கே நிக ராகும். அல்லது நல்ல வரன் கிடைக்கவில்லை யென்று, காலத்தில் விவாஹம் செய்யாமல் இருந்தாலும் ஜனங்களின் நிந்தைக்கு ஆளாவேன். என்ன செய் வது! லோகத்தில் 'பெண்ணின் தகப்பன்' என்னும் பட்டப்பெயர் கிடைத்துவிட் டால் அவன் பாடு போதும். இந்த்ரனுக்கு ஸத்ருமான கீர்த்தி, ஐச்வர்யம், பராக்ரமம், எல்லாம் இருந்தும் ஒன்றுக்கும் பயன் இல்லை. அவனுக்கு நேரும் கஷ்டம் அபரிமிதம். தனக்குத் தக்க ஸம்பந்தம் செய்தாலும், மாப்பிள்ளை மேரு பர்வதத்தின் மேல்தான் இருப்பான். ஒரு ஏழைக்குக் கொடுத்தால் அடங்கின சரக்காய் இருப்பான் என்று எண்ணுவதும் வீண். அவன் ஸ்தானத்தில் ஒரு துரும்பைக் கிள்ளிப் போட்டாலும் அது துள்ளி எழும். எவ்விதத்திலும் பெண் ணைப் பெற்றவன் பரிபவம் கேட்கவேண்டியதில்லை. அத்தகைய அலக்ஷ்யமும் அவமானமும் நேரிடும் காலம் நெருங்கியதே! என்ன செய்வேன்? என்று என் பிதா, நடுக்கடலில் ஓடமின்றித் தத்தளிப்பவன் போல் சிந்தைக்கடலில் மூழ்கிச் சோர்வடைந்தார்] என்றுரைத்தாள்.

"எனக்கு இத்தருணம் அத்தீந தசை நேர்ந்திருக்கிறது. ஜநகரோ அரசர். க்ஷத்ரிய தர்மத்தை அநுஸரித்து வில்லைப் பந்தயமாக வைத்தார். ஸர்வ சக்தன் ஒருவரே அப்பரீக்ஷையில் தேறினர். நானோ அந்தணன். வேதத்தைப் பந்தய மாக நான் வைக்கவேண்டும். வேத ப்ரதிபாத்யன் வந்து மணம் புரியவேண் டும். ஞானமே வடிவெடுத்திருக்கும் இவளுக்கு ஸர்வஜ்ஞனைத் தவிர வேறு எவர் கைப்பிடிக்கத் தகுந்தவர்?" என்று சிந்தைக்கடலில் ஆழ்ந்தார் ஸ்ரீ விஷ்ணு சித்தர்.

அத்தருணம் யாழோ குழலோ என்று திகைக்கும் வண்ணம் எங் கிருந்தோ ஓர் மதுர ஸ்வரம் எழுந்தது. அத்திசை நோக்கிச் சென்றார். இது ஓர் அத்புதம். தன் செல்வத் திருமகள் கனவில் பேசுகிறுள். "ஓ நாதா! உலகுக்கெல்லாம் தேவரீர் ஒருவரே நாதன். என்னே தேவரீர் விசித்ர லீலை கள்! நடனைப்போல் அடிக்கடி அநேக ஆச்சர்ய வேடம் தரிக்கிறீர். விசித்ர மீன் வேடம் பூண்டு வேதங்களை மீட்டீர். ப்ரம்ஹாண்டமாகிய ஆமை ரூபம் தரித்து மந்தர கிரியைத் தாங்கினீர். இப்பொழுது ஒரு மாயா வராஹமாய் வந்து என்னை உத்தரித்தீர். தேவரீர் திருவடித்தாமரை நிழலில் அடைக்கலம் புகுந்தவர்களும், ஏகாந்த பக்தி உடையவர்களுமாகிய மஹான்களுக்கு, அத்புத ரஸத்தைப் புகட்டிப் போஷிக்கிறீர். இந்த லீலை, பாகவதோத்தமர்கள் ஆநந்தபர வசர்களாய்த் தேவரீர் ஆச்சர்ய சரிதைகளைப் பாடியாடும் பொருட்டே அன்றோ!

"நமஸ்தே தேவதேவேஶ வராஹவத நாச்யுத।
க்ஷீரஸாகரஸங்காஶ வஜ்ரஶ்ருங்க மஹாபுஜ॥"

"ஓ தேவாதிதேவா! ஒருபோதும் ஆச்ரிதர்களைக் கைவிடாத அச்சுதா! உன் அடியாளாகிய என்னைக் காக்கவோ இவ்வாச்சர்ய வராஹரூபம் தரித்தனை!

கல்லேயும் புல்லேயும் வசீகரிக்கும் பேரழகு. திருப்பாற்கடல் போன்ற திவ்ய திருமேனி. ஜலத்திற்கும் சேற்றிற்கும் அஞ்சாத ப்ராணியின் உருவம். என்னைப் பெயர்த்தெடுக்க வஜ்ராயுதம் போன்ற கோரைப் பற்கள்! இத்தகைய தாமரைக் கண்ணனுகிய உனக்கு அநேக நமஸ்காரங்கள்.''

''𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑍋𑌹𑌂 𑌤𑍍𑌵𑌦𑌾𑌧𑌾𑌰𑌾 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾 𑌤𑍍𑌵𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 ।
𑌮𑌾𑌧𑌵𑍀𑌤𑌿 𑌚 𑌲𑍋𑌕𑍋𑌽𑌯𑌂 𑌆𑌹𑍍𑌵𑌯𑌤𑍍𑌯𑍇𑌤𑌨𑍇𑌨 𑌹𑌿 𑌮𑌾𑌂 ॥''

''ஓ ப்ரபோ ! நான் தேவரீரிடமிருந்து ஜனித்தேன். தேவரீரை ஆச்ரயித்திருக்கிறேன். தேவரீர்க்கு ஶரீரமாய் நிலைநின்றிருக்கிறேன். தேவரீர் ஸம்பந்தம் என்றும் எனக்கு மாறுவதில்லை. ஆகையால் லோகங்கள் என்னை மாதவி என்றும் மாதவப்ரியை என்றும் ப்ரஸித்தமாய் அழைக்கும். ஸ்வாமி! இப்பொழுது எனது ஓர் விஜ்ஞாபநம். என்னை இப்ரளய ஸாகரத்திலிருந்து கரை யேற்றினற்போல், அநாதி காலமாய்க் கரையேற வழியின்றி அகிஞ்சநர்களாய் வருந்தும் என் மக்களேயும் பவ ஸாகரத்திலிருந்து கரையேற்றவேண்டுமல்லவா? ஞானப்பிரானே! இத்திவ்ய ஸஞ்சர்ப்பத்தில் எனக்கு ஞானேபதேசம் செய்து உலகத்தை உய்விக்க ப்ரார்த்திக்கிறேன். ஜீவாத்மாக்கள் ஸுலபமாய்க் கடைத்தேறும் உபாயம் எதுவோ, அதை க்ருபை செய்து அருளவேண்டும். உடனே அமுதமொழி பொழியும் ஓர் கம்பீர த்வனி: ''நாயகீ! உன் பொறுமையும் கருணேயும் அபாரம். ஆகவே, உன் மக்களின் குற்றங்கள் உன் மனக் கண்ணிற்குத் தென்படுவதில்லை. குற்றத்திற்குத் தக்க தண்டனையையே அவர்கள் அநுபவிக்கிருர்கள். அதைப்பற்றி நீ வருந்துவது அழகன்று. தங்களுக்கே தாகம் எடுத்தால் தடாகத்தின் ஸமீபம் வருகிருர்கள். நாம் வேண்டி உபதேசித்தால் அதன் மஹிமையே குறைந்துவிடும்.

பிராட்டி:—''கருணேக்கடலோ இவ்விதம் புகல்வது! நோயாளிக்குப் பால் ஆரோக்யம். ஆனல் அவர்களுக்கு அது சுவைப்பதில்லை. நாம் பலவந்தமாய்ப் புகட்டினல் படிப்படியாய்க் குணமடைந்து பாலின் குணத்தையும் இன்சுவையையும் அறிவார்கள். அதைவிட்டு, அவர்களே எவ்வளவு காலம் தான் பிணியினல் வருந்தச் செய்கிறது? நோயை முதிரச்செய்வதில் பயன் தான் என்ன? சுக்கு வெல்லம் கொடுத்தால் குணமாகும் வயிற்று நோயைப் பாஷாண மாத்ரை கொடுத்தா நீக்கவேணும்? பாவம் என்பது தேவரீர் கோபம். புண்ணியம் என்பது தேவரீர் ஸந்தோஷம். எந்த உபாயத்தால் தேவரீர் திருமுக கமலம் மிகவும் சீக்ரம் மலரும்? திருவுள்ளம் உகக்கும்? அந்த ரஹஸ்யத்தை எனக்கு உபதேசித்தால் அவ்வமுத மொழியை அவர்களுக்குப் புகட்டி நீடித்த நோயை நிவர்த்திக்கிறேன். என்னல் கூடியவரையில் சேதநர்களேத் திருத்திப் பணிகொள்ளச் செய்கிறேன்.''

பகவான்:—''காந்தே! நீ நினைத்தால் ஸாத்ய மாகாததும் உண்டோ? இவ்வவதாரத்தில் உனக்கு அநேக உபாயங்கள் உபதேசித்தேன். அதிலும் பரம ரஹஸ்யம் ஒன்று கூறுகிறேன். செய்வது அத்யந்தம் ஸுலபம். அடைவது பெரும்

பயன். நான் பாட்டினால் பரமாநந்தம் அடைவேன். எக்குலத்தில் பிறந்தவனாகிலும், எப்பாஷையி லாகிலும் என் புகழ்களைக் காநம் செய்தால் அவனை அடிமை கொள்வேன். அவன் பாபங்கள் அப்பொழுதே நெருப்பிலிட்ட பஞ்சு போல் பஸ்மமாகும். தேவி! கீதமாகிற தவத்தால் ஸித்தியடைந்த பரம பக்தனின் அத்புத சரிதத்தை உன் கண்முன் படம்பிடித்துக் காட்டுகிறேன் பார். அவன் நம்மைப் பாடி மகிழ்வித்ததால் நம்பாடுவான் என்னும் பெயர் பெற்றான்."

பிராட்டி:—"வல்லபா! நாவியலால் இசைமாலை சூட்டிய அத்தந்யன் யாவன்? ஸகல துக்கங்களும் அவற்றிற்குக் காரணமாகிய கர்மங்களும் அக்ஷணமே பொசுங்கும்வண்ணம் எந்த மஹான் சொல்மாலைகள் தொடுத்துச் சாத்தினான்?" என்று கூறுமளவில் "ஆஹா! இதோ காண்கிறதே அத்திவ்ய காட்சி!"

"தென் திசையில் மஹேந்த்ரம் என்று ஒரு பர்வதம் உண்டு. அதிலிருந்து திவ்யநதி ஒன்று பெருகி வருகிறது. அதன் கரையில் திருக்குறுங்குடி என்னும் திவ்யதேசம். கார்த்திகை மாஸம் சுக்ல பக்ஷம் ஏகாதசி. இரவு ஒரு ஜாமம் கழிந்திருக்கும். வீணையும் கையுமாய் வருகிறான் ஒரு பக்தன். ஊர் அடங்கலும் ஆழ்ந்த நித்ரையில் இருக்கும் தருணம். மார்க்கத்தில் நிச்சப்தம் குடிகொண்டிருக்கிறது. அப்பப்பா! இதென்ன பயங்கரம்! திடீரென ஒரு ப்ரம்ஹ ரக்ஷஸ் ஓடிவந்து வழி மறைக்கிறதே; ஐயோ பரிதாபம்! அதன் கையில் அகப்பட்டுப் பக்தன் என்ன தவிக்கிறான்? வேதத்தில் ஒரு பஞ்சாதி சொன்னால் அப்பேய் ஸந்தோஷ மடைந்து விலகிவிடும். பாவம்! அவன் அந்தண குலம் இல்லை போலும்! கைப்பொருளற்ற அவன் பகவானுடைய திருவடித் தாமரைகளில் சரணாகதி செய்கிறான். அத்யந்தம் ஆச்சர்யம்! இவனன்றோ மேதாவி. பரம ஆபத்து நேரிடும் காலத்தில் பகவானை அடைக்கலம் அடையவேண்டும் என்னும் சாஸ்த்ரார்த்தத்தை அறிந்திருக்கிறான். பிறகு அத்துஷ்ட ரக்ஷஸ்ஸைப் பார்த்துத் தீநமாய் "அப்பா! உனக்கு மிகவும் புண்ணியம். என்னை ஏன் இவ்விதம் தொந்தரவு செய்கிறாய்? நான் உனக்கு ஒரு கெடுதலும் செய்யவில்லையே. புருஷோத்தமனை ஸுப்ரபாதம் பாடி எழுப்பவேண்டும். இன்னிசைக் கீதத்தில் அவன் மிகவும் ப்ரேமை கொண்டவன். என்னை க்ருபை கூர்ந்து விட்டு விடு; அருணோதயத்துக்குள் நான் போகவேண்டும்" என்று கெஞ்சுகிறான். அப்பேயின் மனம் கல்லினும் கடிநம் போலும். இடியுண்ட கருநாகம்போல் சீறுகிறது அப்பேய். கண்களில் கனல் வீசும் கோபம். இடிமுழக்கம் போன்ற சிரிப்பு. பூமி நடுங்கும் வண்ணம் அட்டஹாஸம். "உன்னை யார் விடப் போகிறார்கள்? பத்து நாளாய்ப் பட்டினி. கோரமாகிய பசி. தெய்வம் எனக்களித்த ஆஹாரம். இக்ஷணமே உன்னைப் புசித்துப் பசி யாறுகிறேன்" என்று கர்ஜித்துக் கூத்தாடுகிறது அப்பேய்.

நம்பாடுவான் முகம் மலர்ந்து விளங்குகிறது. ஏதோ சிறந்த உபாயம் அவன் மனத்தில் தோன்றியது. "அப்பா ராக்ஷஸா! நல்லது. அவசியம் பகவான் உனக்கு உணவாக அளித்த என்னைப் புசித்துப் பசியைத் தீர்த்துக் கொள்ளக் கடவாய். எனக்குத் தேஹத்தில் கொஞ்சமும் அபிலாஷை

இல்லை. இந்த ஶரீரம் மண்ணோடு மண்ணாய் மடிவதைவிட, உன் பசியைத் தணிப்பதில் எனக்கு அளவற்ற ஆநந்தம். ஆனால் எனக்குத் தயவுசெய்து ஒரு வரம் அருளவேண்டும். இன்று கார்த்திகைமீ சுக்லபக்ஷ ஏகாதசி அல்லவா? நாளை த்வாதசி உதயத்தில் எம்பெருமானைக் கானத்தினால் மனமகிழச் செய்ய வேண்டும். இது எனக்கு முக்யமான வ்ரதம். இவ்ரதத்துக்குப் பங்கம் செய்வது உனக்கு அழகன்று. நான் என் வ்ரதத்தை முடித்துக்கொண்டு உடனே திரும்பி வருகிறேன். அப்பொழுது என்னை த்ருப்தியாய் அவச்யம் புசிக்கலாம்" என்று பலவகையாய் வேண்டுகிறான். ஒன்றும் பயனில்லை. அது என்ன சொல்கிறது? "அடே அப்பா! என்ன ஸாமர்த்யம்! என்ன தந்த்ரம்! உன் ஜாதிக்கேற்ற பேச்சுத்தான். எந்த மூடன் உன் பேச்சை நம்பி மோசம் போவான்? எமன் கையில் அகப்பட்டுத் தப்பினாலும் தப்பலாம்; என் கையிலிருந்து மீளும் வகை உண்டோ? இது நடக்கக் கூடிய ஸம்பவமா? என் பசி எனக்குத் தெரியும். கைக்கெட்டிய கனியை விட்டுவிட்டு ஏமாறும் மேதாவி நான் அல்ல. நீ மறுபடியும் இவ்வழியாகவே வரவேண்டும் என்னும் கட்டுப்பாடுதான் என்ன? ஓடிப் பிழைக்கப் பல தேசங்கள் உண்டு. உயிருக்கு ஆபத்து என்று அறிந்தும் இவ்வழி வர எவனுக்கு மனம் துணியும்?" என்று பிடித்துக் கொள்கிறது.

தர்ம மார்க்கத்தை விட்டு அணுவளவும் பிசகாத பக்தன், துக்கம் தாங்காமல் துடிக்கிறான். ஏதோ கர்ம வசத்தால் தாழ்ந்த குலத்தில் பிறந்திருக்கிறான். ஞானம் பக்தி வைராக்யம் இவைகளில் உயர் குலத்தினரை மீறியவனாய் விளங்குகிறான். கையை உயரத் தூக்கி ஸத்யம் செய்கிறான். என்ன ஆச்சர்யம்! எத்தனை கடுமையான சபதங்கள்? நீதியும் தர்மமும் நிறைந்து ததும்புகின்றன அவன் சபதத்தில்.

"ஸத்யேநோத்பத்யதே லோகஸ்ஸத்யே ப்ரதிஷ்டித:।
நாஹம் மித்யா ப்ரவக்ஷ்யாமி ஸத்யமேவ வதாம்யஹம்॥"

"லோகம் உண்டாகியதும் ஸத்யத்தாலே. அது நிலைபெற்று நின்றிருப்பதும் ஸத்யத்தாலே. ஸகலத்திற்கும் காரணம் ஸத்யம். ஆகவே நானும் ஸத்யமே கூறுகிறேன். ஒருக்காலும் பொய் உரைக்கமாட்டேன். என் சொல்லை த்ருடமாக நம்பு. ஸர்வலோக நாதனாகிய ஸர்வேச்வரனுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடி என் வ்ரதத்தை முடித்துக்கொண்டு திரும்பி வருகிறேன். எம்பெருமான் இன்புறும் கானத்திற்கு இடையூறு இழைப்பது உனக்குத் தகாது. நீ நம்பும் வண்ணம் பல ப்ரமாணங்களைச் செய்துகொடுக்கிறேன். நான் மீளவும் வராமல்போனால், எவன் பங்க்திபேதம் செய்கிறானோ, எவன் பூதானம் கந்யாதானம் கொடுப்பதாய் வாக்களித்துப் பிறகு மறுக்கிறானோ, எவன் மித்ர த்ரோஹம் குருத்ரோஹம் புரிகிறானோ, எவன் தாஹத்துடன் ஓடிவரும் பசுக்களைத் தண்ணீர் குடிக்கவொட்டாமல் தடுக்கிறானோ, இவர்கள் அடையும் பாபங்களை அடையக்கடவேன்" என்று இவ்விதம் பல வகைக் கடின ப்ரதிஜ்ஞைகளைச் செய்தான்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

தில்லஸ்தாநத்தில் ஸ்ரீ அஹோபில மடம் ப்ரதிஷ்டை

உதார ஹ்ருத்தும் வைராக்ய நிதியுமான தில்லஸ்தாநம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபக ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதியாய் ப்ரஶஸ்தமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுல் தில்லஸ்தாநத்தில நிர்மாணிக்கப் பட்டுள்ள ஸ்வாச்ரமத்தை, பெருமாள் திருவாராதநத்துக்கு வேண்டிய மற்றும் சில பூமிகளுடன், ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு ஏற்கெனவே ஸமர்ப்பித்திருக்கிற விஷயம் ஸர்வ விதிதம். அந்த மடத்தில் ஸ்ரீமதழகிய சிங்கர் நியமநப்படி, ஸ்ரீரங்கத்திலிருந்து ஸ்ரீ ஸந்நிதி ஆஸ்தாந வித்வான் மஹோபதேஶக தேசிக தர்சந விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ பட்டர், மற்றும் சில கைங்கர்யபரர்கள், இவர்களுடன் தைமீ 16வ ஸாயம் எழுந்தருளினர். 17வ புதன்கிழமை ம்ருத்ஸங்க்ரஹணாநந்தரம், ராத்ரி ப்ரதிஷ்டாஹோமாதிகள், திவ்ய ப்ரபந்த வேத பாராயணாதிகள், ஸ்ரீ பாஷ்ய ஸ்ரீமத்ராமாயணாதி பாராயணங்கள் முதலியன ஆரம்பிக்கப்பட்டன. மறுநாள் ப்ராதஸ் ஸாயம் ஹோமங்களும் பாராயணங்களும் அழகாக நடந்தன. அதற்கு அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார். உடனே கும்ப லக்நத்தில் யதாக்ரமம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ஸீதாபிராட்டி, இளையபெருமாள், கண்ணன், ஸ்ரீமதாதி வண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கர் திருப்ரதிஷ்டைகளும் விசேஷ சாத்துமறையும் ஸம்ப்ரமமாக நடந்தன. அன்று ஆதுநிக ஸ்ரீமதழகிய சிங்கர் திருநக்ஷத்ரமானதால், ஸமீப அக்ரஹாரங்களிலிருந்து அனேக ஸ்வாமிகள் குழுமியிருந்தனர். திருக்கண்டியூர், கல்யாணபுரம், பெரும்புலியூர், உள்ளூர் எம்பெருமான்களுடைய ப்ரஸாதங்களும் ஸகோஷமாக எழுந்தருளப் பண்ணப்பட்டு, அருளப்பாடுகளுடன் ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன.

அப்போது ஸந்மநஸ்வியான (தில்லஸ்தாநம்) நாதமுனி ஸ்ரீ. உப. N. K. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமியால் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் முதலிய எம்பெருமான்களுக்குச் சாத்தியிருந்த ரூ 300 பெறுமான திருவாபரணங்களை அநேக ஸதஸ்யர்கள் முன்னிலையில் ஸ்ரீமடத்து ஸொத்து ஜாப்தாவில் சேர்த்துக் கையெழுத்திட்டுப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து விட்டார். மத்யாந்ஹம் பக்ஷ்ய போஜ்யாதிகளுடன் சுமார் 400 திருநாமங்களுக்குத் ததீயாராதநம் நடைபெற்றது. தாம்பூலாதி விநியோகாநந்தரம் பட்டர், கைங்கர்யபரர், பாராயண காலக்ஷேபாந்வித ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸம்பாவனை பண்ணப்பட்டது.

அன்று ஸாயம் 4-மணிக்கு ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி, பகவதவதாரங்களுள் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் மஹிமாதிஶயங்களையும், ஆசார்யாவதாரங்களுள் ஸ்ரீமதாதி வண்சடகோப மஹாதேசிகன் உபகாராதிஶயங்களையும், தத்காலம் நம் ஸ்ரீ அழகிய சிங்கர் நமக்குச் செய்தருளியிருக்கிற ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ப்ரதிஷ்டை, ஶாஸ்த்ர வித்யாசாலை, மாலோல வித்வத் ஸதஸ், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகை முதலிய உபகார விசேஷங்களையும்பற்றி, அங்குள்ளார் அனைவரும் ஆநந்திக்குமாறு அம்ருத வர்ஷம் பொழிந்தருளினர். அச்சமயம் அங்கு எழுந்தருளியிருந்த மதுராந்த

கம் வித்வான் ஸ்ரீ. உப வீரராகவாசார்ய ஸ்வாமி, கல்யாணபுரம் ஸ்ரீ. உப சக்ரவர்த்யாசார்ய ஸ்வாமி முதலியோர் யாவரும் கேட்டுக் களித்தனர்.

ராத்ரி ஸ்ரீமதாதி வண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கு, உள்ளூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸந்நிதியில் மங்களாசாஸநம் ஆகி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளுடன் உபயவேத கோஷங்களுடன் வீதி ப்ரமணம் விசேஷமாய் நடந்தது. இவ் வைபவம் யாவற்றுக்கும் மூலகாரணமும், ச்ரத்தா பால்யமுள்ள வ்ருத்தரும், பகவத் பாகவத கைங்கர்ய நிரதருமான ஸ்ரீ. உப. R வீராஸாமி ஐயங்கார் ஸ்வாமியினுடைய உதார மநஸ்ஸுக்குத் தக்கபடி சரண்யன் இவ்வுத்ஸவத்தைச் சிறப்பாக நடத்திக் கொண்டான் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமதழகிய சிங்கர் நியமநத்தைச் சிரஸா வஹித்து, ஆநுபூர்வியாக யாவற்றையும் கூட இருந்து பரிமளிக்கும்படி நடத்தி அடியோங்களைக் கௌரவித்தருளிய ஸ்ரீ உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமிக்கு அடியோங்களுடைய க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்ரீ ஸ்ரீரங்கஸஞ்ஜீவி ஸேவக:

தில்லஸ்தாநம்
20-2-46.

T. S. சேஷாத்ரி தாஸ:

(2)

42-ம் பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரின் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்
[ஸ்ரீ மதுராந்தகம் கலாசாலையில் நடந்த வைபவம்]

நிகழும் பார்த்திவஷூ தைமீ 19உ (1—2—46) வெள்ளிக்கிழமை உத்திராட நக்ஷத்ரம் கூடிய சுபதிநத்தில், ஸ்ரீமதஹோபிலமடம் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஸ்ரீ மதுராந்தகம் கலாசாலையில் வெகு விமர்சையாக நடந்தது. அன்று பெருமாள் ஸந்நிதியிலிருந்து மாலை மர்யாதைகளுடனும் சத்ர சாமராதி வாத்யங்களுடனும் ஸ்ரீ மடத்துக்குச் சென்று, அங்கு மர்யாதை யானவுடன், அதே மாலையைப் பெரிய வீதியில் ஊர்வலமாகக் கொணர்ந்து, ஸம்ஸ்க்ருத கலாசாலையில் உள்ள ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுருவப் படத்துக்குச் சாத்தி மர்யாதை பண்ணப்பட்டது அநேக மஹான்கள் கூடியிருந்தார்கள். அப்போது ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமிகுமாரர், வித்வான் ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகியசிங்கரின் கல்யாண குணங்களைப் பரக்க உபந்யஸித்தார். பின்னர் மங்களபூர்வகமாகக் கோஷ்டி கலைந்தது.

* * * *

தூசியில் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்.

ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகனால் ப்ரதிஷ்டை செய்யப் பட்டு, ஸ்ரீசடகோபவாஸம் என்னும் பெயருடைய தூசி ஸம்ருத்த ஹாரத்தில், நாளது பார்த்திவஷூ தைமீ 19உ வெள்ளிக்கிழமை, ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருதரான ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், ஸ்ரீ ஸந்தாநவல்லி நாயிகா ஸமேத ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் ஸந்நிதியில் விசேஷமாக நடைபெற்றது. உதயாதி முகூர்த்த நாழிகைக்கு ஸ்ரீபாதுகைகளை சத்ர சாமர வாத்ய கோஷங்களுடனும், எத்ஸரிகை,

வேதபாராயணம், ஸ்தோத்ர ஜாலங்களுடன் வீதி ப்ரமணம் கண்டருளி, ஸ்ரீ ஸந்நிதி மண்டபத்தில் எழுந்தருளப்பண்ணி, பெருமாளுக்குத் திருவாராதனம் கண்டருளி, ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்குப் பரிவட்டம் மரியாதைகளாகி, சாற்றுமறை ஸம்பாவனைகள் தீர்த்தம் ஸ்ரீ பாதுகா தீர்த்தம் முதலியன நடந்து, தக்ஷிணா ப்ரதானங்கள் கோஷ்டி விநியோகம் விசேஷமாக நடைபெற்றன. க்ருஹங்கள்தோறும் விசேஷ ததீயாராதனங்கள் நடைபெற்றன. மத்யாஹ்னம் தாயார் பெருமாள் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும் ஸ்நபந திருமஞ்சனம் நடந்து கோஷ்டி விநியோகமாகி, ராத்ரி பெருமாளும் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் வீதி ப்ரமணம் கண்டருளி, தீர்த்தம் ப்ரஸாதம் விநியோகங்கள் விசேஷமாக நடைபெற்றன. இந்த ஸம்வத்ஸரம் நடந்த உத்ஸவம்போலவே, வர்ஷம்ப்ரதி வர்ஷம் விசேஷமாக நடத்தி அடியேங்களை க்ருதார்த்தராக்கும்படி ஸ்ரீமதழகிய சிங்கர் அனுக்ரஹிக்க ப்ரார்த்திக்கிறோம்.

சேட்லூர்-ஸ்ரீநிவாஸராகவ தாஸந்

(3)

பண்ருட்டி ஸ்ரீ மஹாராதநம்

ஸ்ரீ அஹோபில மடத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 23-வது வார்ஷிக மஹாராதன மஹோத்ஸவம் 28ம்தேதி முதல் 30ம் தேதி வரையில் மூன்று தினங்கள் பண்ருட்டி அக்ரஹாரத்தில் வழக்கப்போல் அதி விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. முதல் நாள் வேதபாராயண அத்யாபகங்கள் உபக்ரமித்து, மூன்றும் நாள் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுருவப் படத்திற்கு விசேஷ அலங்காரம் செய்து, வீதி உத்ஸவமும் சாத்துமுறையும் நடந்தன. இந்த மஹோத்ஸவத்திற்கு அனேக இடங்களிலிருந்து ஆஸ்திகர்களும் வைதிகர்களும் லௌகிக ப்ரபுக்களும் விஜயம் செய்தார்கள். முதல்நாள் கள்ளக்குரிச்சி வக்கீல் ஸ்ரீ. T. A. தாதாசாரியரால் "திருவிக்ரம ப்ராவம்" என்பதுபற்றி உபந்யாஸமும், மறுதினம் திருவையாறு ராஜாஸ் காலேஜ் புரொபஸர் வித்வான் ஸ்ரீ. S. T. ஸ்ரீனிவாஸாசாரியரால் "ஸ்ரீராம ப்ரம்ஹசர்யம்" என்பதுபற்றி ஹரிகதா காலக்ஷேபமும், 3-வது நாள் திருவஹீந்த்ரபுரம் வித்வான் ஸ்ரீ. ஸ்ரீனிவாஸமூர்த்தி அய்யங்காரால் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்பதுபற்றி உபந்யாஸமும் நடந்தன. இந்தக் கைங்கர்யம் ஸ்ரீபார்த்தஸாரதி அய்யங்காரின் சிரத்தையினாலும், பெரு முயற்சியினாலுமே வருஷாவருஷம் நடந்து வருகிறது.

4

ஸ்ரீ மாலோல ஸதஸ்

[இவ்வர்ஷம் ஹைத்ராபாத்தில் நடைபெற்ற மாலோல வித்வத் ஸதஸ் விஷயமாக ஸ்ரீகார்யம் ஸ்வாமி பின்வருமாறு ஒரு ஸ்ரீமுகம் நியமித்திருக்கிறார். அதை நமது ஸஹ்ருதயர்களெல்லாரும் அறியுமாறு மிக்க ஸந்தோஷத்துடன் ப்ரசுரம் செய்கிறோம்.]

ஸ்ரீ. ந்ரு. ப்ரி. ஸம்பாதகர்.

விஜ்ஞாபநம். ஸ்ரீ அழகிய சிங்கர் திருமேனி பாங்காய் எழுந்தருளியாயிருக்கிறது. மாலோல வித்வத் ஸபை இவ்வருஷம் அதிவிமர்சையாய் நடந்தது. சுமார் பதினாயிரம் ரூபாய் வித்வத் ஸம்பாவனை முதலானவைகளில் செலவழிக்கப்பட்டது.

இவைகளெல்லாம் இவ்வூர் வாஸிகளான, ஸ்ரீ. உப. திவான்பகதூர் S. ஆராவமுது அய்யங்கார், வக்கீல் ஸ்ரீ. நரஸிம்ம அய்யங்கார், ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ, ராமானுஜ அய்யங்கார், ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் முதலிய ப்ரமுகர்களாலேயே, வாக்ஸஹாயம் மூலமாகவும் ஸ்வயமாகவும் நிறைவேற்றப்பட்டன. வித்வான்கள்யதோசிதம் உபசரிக்கபட்டார்கள். பத்து நாளும் வாக்யார்த்தம் முதலானவை நடந்தன. அதில் நம் மதுராந்தகம் காலேஜ் ந்யாய சாஸ்த்ராத்யாபகரான ஸ்ரீ. உ. வே. வில்லிவலம் நாராயணாசாரியர், ஒவ்வொரு வித்வானும் சொல்லும் விஷயத்தை, விஷய ஸோயநம் செய்து, அவ்வித்வான்கள் சொல்லும் ஆக்ஷேபங்களுக்கு ஸமாநாதிகரணமான ப்ரதியுத்தரம் சொல்லி வந்ததின்பேரில், ஸ்ரீ அழகிய சிங்கருக்கும், ஸதஸ்ஸில் உள்ளவர்களுக்கும், அதிக திருப்தி உண்டாயிற்று அதன்பேரில் திருநக்ஷத்திர மஹோத்ஸவ திநத்தில் ஸம்பானம் அளித்தபிறகு, அதிஸந்துஷ்டரான ஸ்ரீ அழகிய சிங்கரால் அவருக்கு "வேதாந்த வாவதூகர்" என்கிற ஒரு பிருதும் அளிக்கப்பட்டது. அவருக்கு இதுவிஷயமாய் ஒரு ஸ்ரீமுகம் அனுப்புவதாகவும் ஸ்ரீ திருவுள்ளம். இந்த ஸமயங்களில் தேவரீர் எழுந்தருளாதது ஒரு குறையே. ஸதஸ்ஸில் ஸுமார் 100 வித்வான்களுக்குமேல் வந்திருந்தார்கள். "தத்வடீகா" மஹோத்ஸவமும், அதில் விஷய விசாரமும் நடந்தன. மேல்கண்ட விஷயங்கள் ஸ்ரீ அழகிய சிங்கர் அருளிச்செய்த விஷயமாதலால், நம் ந்ருஸிம்ஹ ப்ரியா பத்திரிகையில் பிரசுரம் செய்யவும்.

ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யம் வித்வான் ஜோஸ்யம் ரங்காசாரியர்.

5

ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப ஸபா

சிங்காநல்லூர்.

இவ்வூரில் பார்த்திவ நாம ஸம்வத்ஸரம், மகர மாஸம், 19ந்தேதி (1—2—46) சுக்ரவாரம், அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் திரு நக்ஷத்திரம் சிஷ்யர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

காலையில் விசேஷமாக ஆராதநம் நடைபெற்றது. மாலை 4.மணிக்கு ஷை ஸபாவின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ. உ. வே. எஸ். வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி தலைமையில், ஸ்ரீ. கே. த்ரிவிக்ரம நாராயண அய்யங்கார் 'ஆசாரியரும் சிஷ்யர்களும்' என்னும் விஷயத்தை உபந்யஸித்தார்.

'சேலத்தில் நடைபெற விருக்கும் ப்ராஹ்மண ஸேவா ஸங்க விசேஷக் கூட்டத்திற்குக் காரியதரிசியை ஷை ஸபாவின் பிரதிநிதியாக அனுப்பவேண்டும்' என்று கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சிங்காநல்லூர் 2—2—46

கே. த்ரிவிக்ரம நாராயணன்
விளம்பரக் காரியதரிசி.

6

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, ஸ்ரீ அஹோபில மடம், தேரழுந்தூர்

ஷை ஸபையின் நான்காவது மாதாந்தரக் கூட்டமொன்று 23-2-46 சனிக்கிழமையன்று மாலை 4—மணிக்கு இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸ்ரீ. உப. T. வேதாந்தராமாநுஜாசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடிற்று. அப்போது ஓவியக்கலை வல்லுநரான ஸ்ரீ உப. T. A. ராஜகோபாலையங்கார் ஸ்வாமி, ப்ரக்ருதம் ஸ்ரீ மடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கருடைய கல்யாணகுணங்களைப் பற்றியும், ப்ராஹ்மணனுக்கு அத்யந்தம் அவசியங்களான சிகாயஜ்ஞோபவீதங்களின் ப்ராதாந்யத்

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவ ௵ பங்குனிமீ

1உ வியாழக்கிழமை	மீந ரவி 4-26, ஷடசீதி: சூந்ய திதி; த்வாதஸீ 47-19. திருநாராயணபுரம் வைரமுடி
2உ வெள்ளிக்கிழமை	மீந சுக்ல த்ரயோதசி திதி
5உ திங்கட்கிழமை	பங்குனி உத்திரம்
11உ ஞாயிற்றுக்கிழமை	ஷஷ்ட 11-46; ஸப்தமி திதி.
12உ திங்கட்கிழமை	ஸப். 16-12; அஷ்டமி திதி.
13உ செவ்வாய்க்கிழமை	அஷ் 19-45; நவமி திதி. [இன்று நவமிக்கு அதிக அபராஹ்நவ்யாப்தி]
14உ புதன்கிழமை	நவமி 22-12; அதிதி
15உ வியாழக்கிழமை	தஸமி 23-27; தஸமி திதி.
16உ வெள்ளிக்கிழமை	ஸர்வ ஏகாதசி - ஏகாதஸீ திதி
17உ சனிக்கிழமை	த்வா. 22-7, த்வா - த்ரயோ; திதி த்வயம்.
18உ ஞாயிற்றுக்கிழமை	த்ர. 19-38; சதுர்த்தஸீ திதி
19உ திங்கட்கிழமை	சது 16-7; ஸர்வ அமாவாஸ்யை
28உ புதன்கிழமை	நவமி 24-35 - நவமி திதி ஸ்ரீராமநவமி.
29உ வியாழக்கிழமை	தஸ. 21-56 தஸ- ஏகா. திதி த்வயம்.
30உ வெள்ளிக்கிழமை	ஏகா - 20-22; ஏகாதஸீ வ்ரதம். த்வா. திதி

வ்யய ௵ சித்திரை மீ 1-உ சனிக்கிழமை த்வா - 20-10; மேஷ ரவி 24-47; வர்ஷப் பண்டிகை.

63-ம் பக்க தொடர்ச்சி.

செய்திகள்

தைப் பற்றியும் பரக்க உபந்யஸித்தார், அநந்தரம், அச்சபைக்கு வந்திருந்த சிறுவர்களிற் சிலரை அக்ராஸநர் ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ர நாமத்திற் சில பகுதிகளைக் கேட்டு, அவர்கள் அக்ஷர சுத்தத்துடன் சொன்னதால், அவர்களில் நால்வர்க்குத் தலா ஒவ்வொரு ஸஹஸ்ரநாம புஸ்தகம் பரிசாக அளித்து, "இந்த ஸபை அடுத்த மாஸம் ரிடயர்ட் எஞ்ஜினீர் ஸ்ரீ. உப. G. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் தலைமையில் கூடு மென்றும், அப்போது மற்றைச் சிறுவர்கட்கும் ஸ்ரீ ஸஹஸ்ரநாமத்தில் சிற்சில பகுதிகள் பரீக்ஷிக்கப்பட்டு, வெற்றி யடைந்தோர்க்குப் புஸ்தகங்களே வெகுமதியாக அளிக்கப்படு மென்றும், இந்த ஸபைக்காகவே திருக்குடந்தையினின்றும் ஓர் ஆஸ்திகர் 10-ஸஹஸ்ரநாம ஸ்ரீ கோஸம் இலவசமாக அளித்துள்ளா ரென்றும், இந்த ஸபை க்ராமத் தலைவர் ஸ்ரீமான் N. க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் (பொக்கிஷதார்) முதலியோரின் ஒத்துழைப்பால் இனிது நடக்கின்றதென்றும் போற்றிப் பேசினர். மாலை 6-மணிக்கு மங்கள பூர்வகம் ஸபை இனிது முடிந்தது.

கிடாம்பி R. நரஸிம்ஹ தாஸன்,
(கார்யதர்சி.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

இந்தப் பூலோகம் முழுவதும் க்ரூரமான துர்ப்பிக்ஷம் ஸம்பவித்திருக்கிற தென்றும், அதனுல் ஜனங்கள் மஹத்தான கஷ்டத்தை அநுபவிக்கிருர்க ளென்றும் வ்ருத்தாந்த பத்ரிகைகள் சொல்லுகின்றன. நமது தேஶத்திலும் அந்தத் துர்ப்பிக்ஷம் அத்யுக்ரமாக ஏற்படுமென்று தேஶ ஸ்திதியை அறிந்தவர்கள் சொல்லுகிருர்கள். இந்தத் துர்ப்பிக்ஷத்திற்குக் காரண மென்ன வென்று நிச்சிதமாகச் சொல்லக் கூடவில்லை. இரண்டு மூன்று வர்ஷங்களுக்கு முன் ஸகல ஜனங்களுக்கும் போதுமான அளவு உத்பத்தியாகிக் கொண்டிருந்த தாந்யங்கள் திடீரென்று அபர்யாப்தமாகப் போவானேன்? ஜந ஸங்க்யை அதிகரித்து விட்டதென்று சொல்வதற்கில்லை. ப்ரத்யுத: சென்ற பத்துப் பதினைந்து வர்ஷங்களாக நடந்த கொடிய யுத்தங்களில் நாஶமடைந்த ஜனங்களைக் கணக்கிட்டால் ஜனங்களின் ஸங்க்யை குறைந்திருக்கவேண்டுமென்றே சொல்லவேண்டும். ஒருகால் உணவுப் பொருள்களின் உத்பத்தி குறைந்து விட்டதென்றும், அதனுல் இந்தத் துர்த்தசை ஸம்பவித்திருக்கின்ற தென்றும் சொல்லலாமோ வெனில், அப்படி உணவுப் பொருள்களின் உத்பத்தி குறைவதற்குக் காரணங்களைக் காணேம். மழை போதுமான அளவு பெய்யவில்லை என்பது உண்மையே. அதனுல் இம்மாதிரி அத்யுக்ரமான கஷ்டம் ஏற்பட்டு விடுமோ? மழையின் அபாவம் லோகம் முழுவதிலும் நேர்ந்தது என்று சொல்வதும் நம்பத்தகுந்த தன்று. த்ருப்திகரமான காரண மொன்றும் தெரியவில்லை. காரணம் தெரியாவிட்டா லென்ன? கார்யமோ வ்யக்தமே. லோகம் முழுவதும் ஆஹாராபாவத்தால் தபிக்கின்ற தென்பது ஒருவராலும் மறுக்க முடியாத விஷயம்.

துர்ப்பிக்ஷம்

இந்த ஸ்திதியை உணர்ந்து நமது ராஜாங்கத்தார் ஜனங்களின் கஷ்டத்தை ஒருவாறு நிவர்த்திக்க ப்ரயத்நப் படுகின்றனர். ஜனங்களுள்சிலர் ஸ்வரூபமான ஸொத்து உள்ளவர்கள்; அவர்களுக்குத் தாந்யங்களின் ப்ராப்திக்கு இடமுண்டு. அப்படிப் பட்ட ஸொத்து இராதவர்கள் பலர். அவர்களுக்கு உணவுப் பொருள்கள் க்ரயத்திற்கே கிடைக்கக் கூடியவை. அவை க்ரயத்திற்கு அகப்படாவிட்டால், அவர்களுக்கு ஆஹாரத்திற்கு வழியிராமற் போய்விடும். மிராசுதாரர்கள் தம்மிட மிருக்

கும் அதிகாம்சத்தை இவர்களுக்கு விற்பார்களென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது; அப்படி விற்றாலும் ந்யாய்யமான க்ரயத்திற்கே விற்கவேண்டு மென்ற நிர்ப்பந்த மொன்று மில்லை. அவர்களிடம், விற்கக் கூடிய அதிகாம்சம் இராமற் போனாலும் போகலாம். இம்மாதிரியான கஷ்டம் நேராமல் ஜனங்களைப் பாதுகாக்க வேண்டியது ராஜாங்கத்தாரின் தர்ம மாகையால், அவர்கள் இந்த விஷயத்தில் ஒருவித ப்ரவ்ருத்தியைச் செய்வது உசிதமே. தேசத்திலுள்ள தான்யங்கள் அனைவற்றையும் மிராசுதாரர்களிடமிருந்து தாமே வாங்கி அவைகளைத் தமது வசம் வைத்துக்கொண்டு, மொத்த ஜனங்களின் ஸங்க்யையைக் கணக்கிட்டு, தம்மாற் சேர்க்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களை ஜனங்க ளெல்லாருக்கும் ஸமமாகப் பங்கிட்டுக் கொடுப்பதே அவர்களின் மனோவ்ருத்தி. இப்பொழுது லப்யமாக இருக்கும் தான்யத்தைக் கீழ் விவரித்த ப்ரகாரம் பங்கிட்டால், ஒரு வ்யக்திக்குத் தினம் ஒன்றுக்கு, இரண்டு ஆழாக்குக்கு அரைக்கால் ஆழக்கு குறைவாகவே வீதம் கிடைக்குமாம். இம்மாதிரி ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு வர்த்தித்து வந்தால், அடுத்த பல காலம் பர்யந்தம் ச்ரமம் இருக்கமாட்டாதாம். இந்த வீதம் மிராசுதாரர்களுக்கும் மிராசுதாரராக இராதவர்களுக்கும், தனிகர்களுக்கும் தரித்ரர்களுக்கும் துல்யமாம். இந்த வ்யவஸ்தை இன்னும் ஒரு மாஸத்துக்குள் அநுஷ்டாநத்திற்கு வந்துவிடு மென்றும் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு ராஜாங்கத்தார் ப்ரவர்த்திப்பது தர்மத்திற்கு ஒத்ததாகுமா வென்று சிலர் சங்கிக்கலாம். 'வ்யக்தி ஒன்றுக்குத் தினம் ஒன்றுக்கு, இரண்டு ஆழக்கு அரிசி பர்யாப்த மாகுமா? நமது நிலத்தில் விளைந்த தான்யத்தில் நமக்கு எவ்வளவு அபேக்ஷிதமோ அதை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று விதிப்பது ந்யாய்யமோ?' என்று கேள்வி பிறக்கக் கூடும். இப்படிக் கேட்பது சரியன்று. இந்தக் கேள்வி இப்பொழுது ஸம்பவித்திருக்கும் துர்த்தசையை உள்ளபடி அறியாதவர்களின் கேள்வியே யாகும். ஏழை ஜனங்களுக்குப் பெருத்த நாசம் உபஸ்திதமாக இருக்கிறது என்பதை நாம் அவதானிக்கவேண்டும். நமது பக்கத்து வீட்டுக்காரர்கள் பட்டினியால் வருந்துகையில், நாம் நமது உதர பூர்த்தியைத் தேடி அதனால் திருப்தி அடைய முயலலாமா? ஆபத் காலங்களில் நமது உயிரைக் கொடுத்தாவது பிறரைக் காப்பாற்றுவதன்றோ உத்தம தர்மம்? ஆகையால், ராஜாங்கத்தார் செய்யப் புகும் ப்ரவ்ருத்தியின் மீது எவ்வித குறையும் கூறாமல், அதற்கு நாம் ஒத்து நடந்து, ராஜாங்கத்தாருடைய நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொடுக்க நாமெல்லாம் நம்மால் இயலும் வரையில் முயலவேண்டும். அப்படியே எல்லாரும் நடப்பார்களென்று நாம் நம்புகிறோம் ராஜாங்கத்தாரும் தாம் உத்தேசிக்கும் வ்யவஸ்தையை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருங் காலத்தில், தம்மால் நியமிக்கப்படும் அதிகாரிகளால் ஜனங்களுக்கு ஒரு விதமான ஹிம்ஸையும் நேராமல் இருக்கின்றதா வென்பதை ஜாக்ரதையுடன் பார்த்து வரவேண்டும். புதிதான வ்யவஸ்தைகளுக்கு ஸாமாந்ய ஜனங்கள் ஸரஸமாக இணங்கச்செய்வதற்கு அவர்களை ஸாந்த்வமாகவே நடத்த வேண்டும். அதிகாரிகளும் தமது நடத்தையில் யோக்யர்களாகவும் பரோபகாரிகளாகவும் இருத்தல் வேண்டும்.

* * * *

ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையும் அதன் ஆங்க்ல பாஷை மொழிபெயர்ப்பும்.

ஸ்ரீ. உப. டி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியால் ஆங்க்ல பாஷையில் மொழி பெயர்க்கப்பெற்று ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் 'ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை' என்னும் ஒரு க்ரந்தத்தை நாம் வரப்பெற்றோம். இதில் ஒவ்வொரு பாசுரமும் ஆங்க்ல பாஷையில் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதுடன், ஒவ்வொரு பாசுரத்தின் விசேஷார்த்தமும் ஸங்க்ரஹமாக எழுதப்பட்டிருக்கின்றது. க்ரந்தத்தின் முடிவில் இந்த அருளிச்செயலின் ஸ்வாபதேசார்த்தமும் சிறுவர்களுக்கு விளங்குமாறு ஸூசிப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ச்ரத்தா ஸம்பந்நரான ஸ்ரீ. உப. வி.வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும், அந்த ஸித்தாந்தத்தில் அளவற்ற குதூஹலத்துடன் கூடிய டாக்டர் ஸ்ரீ. உப. வி. ராம ஐயங்கார் ஸ்வாமியும் இந்தப் பதிப்புக்குச் சிறந்த முகவுரைகள் எழுதியிருக்கிறார்கள். புஸ்தகம் நல்ல காகிதத்தில் அழகாக அச்சுப்பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. 'மெட்ராஸ் மயிலாப்பூர் மேலைச் சித்ரகுளம் தெரு, 14-நெ. வீட்டிலிருக்கும் ஸ்ரீ டி. கோபாலஸ்வாமி ஐயங்கார்' என்னும் விலாஸத்திற்கு இதை அபேக்ஷிப்பவர்கள் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை அணா 8.

இப்பதிப்பின் முக்ய நோக்க மென்னவென்றால்: ஆங்க்ல பாஷையைப் படிக்கும் நமது சிறுவர்களுக்கு இந்த அருளிச் செயலின் மஹிமையை உணர்த்த வேண்டுமென்பதே. ஏதோ ஒரு விதி வசத்தால் நமது ஸொந்த பாஷையில் வெறுப்புக் கொண்டிருக்கும் நமது சிறுவர்கள், அதில் எழுதப்பட்டுள்ள சிறந்த க்ரந்தங்களின் மஹிமையை அறியாதவர்களாகவே அதை அநுபவிக்கும் பாக்யத்தை இழந்து, மாதா பிதாக்களால் ஸம்பாதிக்கப்பட்டுள்ள அநர்க்கமான ஸொத்தின் மதிப்பை அறியாத புத்ரர்கள்போல, ஏழையாக வர்த்தித்து வருகிறார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்படி அவர்கள் ஏழையாவது அவர்களின் பிசகே என்று சொல்வது யுக்தமன்று. அவர்களுக்கு அந்தச் சிறந்த விஷயங்களைக் கோசரமாகும்படி செய்யாமலிருக்கும் நாமே அந்தக் குற்றத்திற்குப் பாத்யப் பட்டவர்கள் என்றே சொல்லவேண்டும். வஸ்துவின் அழகை எடுத்துக் காட்டினால், அதில் ருசி எவனுக்கு உண்டாகாமல் இருக்கும்? நமது சிறுவர்கள் இந்த ஸம்பத்தைப் பெற்று, அதனால் அவர்கள் ச்ரேயஸ்ஸை அடையவேண்டுமென்று நாம் உண்மையாக விரும்பினால், இரண்டு பாஷைகளிலும் ஜ்ஞாநத்தைப் பெற்றிருக்கும் நாம், இப்பொழுது ஸ்ரீ. டி. ராமஸ்வாமி ஐயங்கார் செய்திருப்பது போல, நமது தமிழ்ப் பாஷையிலுள்ள ரத்நங்களை அவர்களுக்கு ப்ரகாசிக்கும்படி செய்யவேண்டியது அவச்யமே. இந்தக் காரணத்தால் நாம், ஸ்ரீ. டி. ராமஸ்வாமி ஐயங்காரின் ப்ரஸ்துத ப்ரவ்ருத்தியை மிக்க உத்ஸாஹத்துடன் ஆமோதிக்கிறோம்.

ஆழ்வார்கள் அருளிச்செயல்களுள் சிற்சிலவற்றை ஒரு ஆங்க்ல தேசத்து வித்வான் ஆங்க்லத்தில் பத்ய ரூபமாக மொழி பெயர்த்திருக்கிறார். அப்படி மொழி பெயர்க்கப்பட்டவைகளுள் திருப்பாவையு மொன்று. அதை அச்சுப் பதிப்பிக்கும் முன் அவர் அதை அடியேனிடம் காண்பித்து அடியேனுடைய அபிப்ராயத்தைக் கேட்க, அடியேன் அதைப் படித்துப் பார்க்கும்படி ஸம்பவித்தது. அவருடைய ஆங்க்ல நடை மிக்க ச்லாக்யமாக இருந்தும், அநேக அம்சங்களில் மூல க்ரந்தத்தின்

தீப்தி மொழி பெயர்ப்பில் மங்கியிருப்பதைக் கண்டு, அடியேனுடைய அத்ருப்தியை அடியேன் தெரிவித்தேன். அதைக் கேட்டு, அவர் பொருள் ஸம்பந்தப்பட்ட பர்யந்தம் அநேக சீர்திருத்தங்களைச் செய்தார். அப்படிச் செய்தும், சொற்களின் விஶேஷத்தால் ஏற்படும் மஹிமையும் த்வநியின் ஶோபையும் வெளி வராமலே நின்று விட்டன. ஒவ்வொரு பாஷையிலும் அந்தந்தப் பாஷைக்கு அஸாதாரணமாக ஓர் அழகு உண்டு. அது ஒருக்காலும் வேறு பாஷையில் காண்பிக்க முடியாது தான். ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்கார் இதை அறிந்தவரே. அறிந்திருந்தும் அவர் இதை வெளியிடுவதில் துணிந்தது, அவருக்கு இந்த விஷயத்தில் இருக்கும் ஊக்கத்தைக் காண்பிக்கின்றது. பூர்ண ஶோபை வெளிவரா விடினும் சிற்சில அம்சங்களாவது வெளிப்படுமாகையால், அப்படி வெளிப்படுத்துவதால் கிடைக்கும் லாபத்தை உத்தேசித்து நாம் எல்லாரும் அதில் ப்ரயத்நப்படவேண்டும்.

* * * *

வித்யையும் வ்ருத்தமும்

"ஸ்ரீ வைஷ்ணவ நண்பன்" என்னும் பத்ரிகையில், தேவனார் விளாகம் வித்வான் ஸ்ரீ. உப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி 'வித்யையும் வ்ருத்தமும்' என்னும் விஷயத்தைப் பற்றி முக்யமான ஒரு சிறிய வ்யாஸத்தை அநுக்ரஹித்திருக்கிறார். இதில் இரண்டு ஶப்தங்களால் ஸர்வருக்கும் அபேக்ஷிதங்களான ஜ்ஞாநமும் ஆசாரமும் குறிக்கப்படுகின்றன. இவைகளுள் ஆசாரமானது ஜ்ஞாநத்திற்கு உபகாரக மென்றும், அதுவே ஜ்ஞாநத்திற்கு அதிகாரத்தை ஸம்பாதித்துக் கொடுக்கிறதென்றும், எந்த க்ஷணத்தில் ஆசாரத்துக்கு லோபம் நேர்கின்றதோ அப்பொழுது ஜ்ஞாநம் தழதழத்து விடுகிறதென்றும் நமது சாஸ்த்ரம் நிர்ணயித்திருக்கின்றது. "ஆசாரஹீநம் ந புநந்தி வேதா: [ஆசார மிழந்தவனை வேதங்களும் சுத்தனாகச் செய்யமாட்டா]. இக்காலத்தில் ஜ்ஞாநம் ஒன்றுக்கே ப்ராதாந்யத்தைக் கொடுத்து, வ்ருத்தத்தை அத்யந்தம் அநாதரித்து வரும் பெரியோர்கள் பலருண்டு. அவர்களுடைய உபதேசத்தைக் கேட்டும், அவர்களுடைய அநுஷ்டாநத்தைப் பார்த்தும், நமது சிறுவர்களும் ஆசாரத்தை ஒழித்து விடுகிறார்கள். காலத்தில் ஸ்நாநம், ஸந்த்யாவந்தநம் சிகா யஜ்ஞோபவீததாரணம் முதலிய ஆசாரங்க ளெல்லாம் அடியோடு மறைந்து விடுகின்றன. இந்தத் துஸ்திதியைத் தடுப்பதற்கு வைதிகர்களான ஜநங்க ளெல்லாரும் ப்ரயத்நப் பட்டவேண்டு மென்பது ஸ்ரீ தேவனார் விளாகம் ஸ்வாமியின் ப்ரார்த்தனை. இந்த ப்ரார்த்தனையை நாம் ஹார்த்தமாக ஆமோதிக்கிறோம். ஆனால், இது எவ்வளவு தூரம் பலிக்கு மென்பது நமக்குப் புலப்படவில்லை. ஆசார ஹீநர்களான தேசாந்தர ஜநங்களின் ஸஹவாஸமும் ஸஹப்ரவ்ருத்திகளும் இப்பொழுது நமக்கு ஏராளமாக ஏற்பட்டு விட்டன. ஸ்வபாவத்தால் ஆசாரத்தில் விச்வாஸமுள்ளவர்களும், ஆசார சீலர்களாக நடந்துவருவதற்கு லஜ்ஜைப்படும்படியான காலம் வந்து விட்டதே. ஆசாரத்துடன் வர்த்தித்துக் கொண்டு ஜீவித்திருப்பதும் ஶக்யமாயிருக்க மாட்டாது போல் தெரிகின்றது. ஆகையால் நமது ப்ரார்த்தனையெல்லாம் அரண்ய ருதிதமே யாகி விடுமென்றே நாம் பயப்படுகிறோம். கால கதியை யார் தடுக்க ஶக்தராவார்?

189219

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946-பிப்ரவரி மீத்திய சந்தா வஸூல்

			ரூ.	அ.
8	ஸ்ரீ S. ராகவாசார்யர், பம்பாய்	...	3	0
15	,, A. G. நரஸிம்ஹாசார்யர், பம்பாய்	...	3	0
16	,, C. S. ஐயங்கார்,பம்பாய்	...	3	0
18	,, M. K. ஸ்ரீநிவாஸன், பம்பாய்	...	1	0
25	,, T. K. R. ஐயங்கார், பம்பாய்	...	3	0
40	,, C. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், சிவகங்கை	...	3	0
41	,, ராவ்ஸாஹெப் W. க்ருஷ்ணஸ்வாமி ஐங்கார், மயிலாப்பூர்	...	3	0
44	,, S. ரங்கஸாமி ஐயங்கார், திண்டிவனம்	...	3	0
47	,; S. வரதாசார்யர், பம்பய்	...	3	0
48	,, M. S. பாஷ்யம், பம்பாய்	...	3	0
51	,, S. க்ருஷ்ணமாசாரியர், பம்பாய்	...	3	0
61	,, L. ஸ்ரீராமாசாரியர், ஆரணி	...	3	0
99	,, R. ஸந்தாநமையங்கார், த்யாகராயநகர்	...	3	0
124	,, C. S. ஸுந்தராசாரியர், பம்பாய்	...	3	0
134	,, A. V. கோபாலாசாரியர், திருச்சி	...	5	0
154	,, K. ஐயாவையங்கார், திருப்பளாத்துறை	...	3	0
155	,, T. S. நாராயணையங்கார், திருப்பளாத்துறை	...	3	0
175	,, B. K. குப்புஸாமி ஐயங்கார், குத்தி, R. S.	...	2	0
198	,, P. S. ராகவையங்கார், திருநெல்வேலி	...	3	0
225	,, A. மாதவையங்கார், பெங்களூர்	...	3	0
252	,, K. லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர், கோயில் வெண்ணி	...	3	0
255	,, C. R. சாரங்கபாணி ஐயங்கார், கோயில் வெண்ணி	...	3	0
287	,, S. N. வேங்கடேசையங்கார், கோயம்புத்தூர்	...	3	0
294	,, I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை	...	1	0
356	,, K. கோபாலையங்கார், தேரழுந்தூர்	...	3	0
390	,, P. K. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், திண்டிவனம்	...	3	0
399	,, S. நாராயணையங்கார்,மதுரை	...	3	0
400	,, D. வேங்கடராகவன், விழுப்புரம்	...	2	0
429	,, A. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், திருப்பாப்புலியூர்	...	4	0
478	,, E. ஸ்ரீநிவாஸாசார்யர், மேல்மா	...	2	0
486	,, N. V. சாரி, பம்பாய்	...	3	0
508	,, K. S. ரங்கஸாமி ஐயங்கார், மயிலாப்பூர்	...	3	0
513	,, S. M. க்ருஷ்ணமாசார்யர், புது டெல்ஹி	...	3	0
546	,, K. R. பத்மநாபாசார்யர், பம்பாய்	...	3	0
578	,, K. V. பாஷ்யமையங்கார், சிங்கப்பெருமாள்கோவில்	...	3	0
582	President, Brahmin Society, ஒலக்கூர்	...	2	0
584	,, A. R. விஜயராகவய்யங்கார், Tod. Nuggar, சைதாப்பேட்டை		2	0
617	,, R. ஜகந்நாதன், ராவல்பிண்டி	...	5	0
670	,, T. V. ராஜகோபாலையங்கார், தண்ணீர்ப்பள்ளி	...	3	0
673	,, V. ஸ்ரீநிவாஸாசாரியர், லாடபுரம்	...	2	0
677	,, வானமாமலை வேங்கடரங்காசர்யர், மாதுங்கா	...	2	0
707	,, S, சௌரிராஜய்யங்கார், கோபாலஸமுத்ரம்	...	3	0
710	,, ரங்காசாரியர், பெரம்பூர்	...	3	0
711	,, S. A. ஸ்ரீநிவாஸன், மல்லாபுரம்	...	3	0
712	,, T. வரததேசிகாசார்யர், வ்ருத்தாசலம்	...	3	0
713	,, D. கோபாலாசாரியர், சின்ன காஞ்சிபுரம்	...	3	0

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12—0	1—0—0
3.	உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0–12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி) ...	1—0—0	1—8—0
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0–12—0
6.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8.	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் :—

"மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை."
என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.